00

ஸர்வஜித் ஞூ } பங்குனி மீ

{ ஸம்புடம் - 7 { ஸஞ்சிகை - 3

ஸ்ரீ:

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா

[ஸ்ரீ அஹோபில மடத்துப் பத்ரிகை]

OFFICE OF THE REGIST...
22 MAR 1943
MADRAS

ஸம்பாதகர்: வங்கீபுரம் ஸ்ரீ. வாஸுதேவாசார்யர்

: ப்ரசுரிக்கு மிடம் :

நெ. 22, மஹாலக்ஷ்மி தெரு, த்யாகராயநகர்,

சென்னை.

வர்ஷச் சந்தா : } ரூபா 3—0—0 }

{ March 1948 { Vol. 7 No. 3

விஷய ஸூசிகை.

		பக்கம்.
1.	ஸ்ரீ ஸங்கல்ப ஸூர்யோதயம்	... 46
2.	உறக்கம் தவிர்த்த உத்தமி	... 53
3.	பஞ்சாங்க ஸங்க்ரஹம் ...	... 57
4.	சந்த்ரகலா மாலை ...	... 58
5.	உபாதாநலக்ஷண தத்வம் ...	... 64
6.	மார்கழி நீராட்டம் ...	... 66
7.	செய்திகள் ...	... 70
8.	ஸம்பாதகரின் குறிப்புக்கள் ...	... 72
9.	வாஸந்திகா பரிணயம்	

வ்யாஸம் எழுதுபவர்களுக்கு விஜ்ஞாபநம்.

1. எழுதி யனுப்பப்படும் வ்யாஸங்கள், மூன்று அல்லது நாலு பக்கங்களுக்கு அதிகப்படாமல் சுருக்கமாகவும் தெளிவாகவும் இருத்தல் வேண்டும்.

2. ப்சுரப்படுத்தப்படாமல் இருக்கும் வ்யாஸங்க ளெல்லாம், தபால் சார்ஜுக்கு வேண்டிய ஸ்டாம்பு அனுப்பப்படும் பக்ஷத்தில், அவை உடனே திருப்பி அனுப்பப்படும்.

3. அநேக வித்வான்கள் மஹத்தான க்ருபையுடன் வ்யாஸங்களை அனுப்பி, அவைகளை உடனே பத்ரிகையில் ப்ரசுரம் செய்ய வேண்டு மென்று நியமிக்கிறார்கள். பத்ரிகையில் இடம் ஸங்குசிதமாக இருக்கிறபடியால், அவர்களுடை நியமநத்தை அவர்கள் இஷ்டப்ரகாரம் நிறைவேற்ற ஸாத்யப்படாமல் இருகிறது. அவகாசம் ப்ராப்தமாகும் பொழுது அவைகள் யதார்ஹம் ப்ரசுரம் செய்யப்படும். அப்படிச் செய்வதால் ஸம்பவிக்கும் கால விளம்பத்தை அந்த வித்வான்கள் க்ருபையுடன் க்ஷமிக்க வேண்டுமென்று ப்ரார்த்திக்கிறோம்.

22 MAR 1943
MADRAS

𑌶𑍍𑌰𑍀𑌃

𑌶𑍍𑌰𑍀𑌮𑌤𑍇 𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑍀𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌪𑌰𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑍇 𑌨𑌮𑌃



ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா

ஸம்புடம் 7	ஸர்வஜித் ௵ பங்குனி ௴	ஸஞ்சிகை 3

"𑌅𑌹𑍋𑌬𑌿𑌲𑍇 𑌗𑌾𑌰𑍁𑌡𑌶𑍈𑌲𑌮𑌧𑍍𑌯𑍇
𑌕𑍃𑌪𑌾𑌵𑌶𑌾𑌤𑍍 𑌕𑌲𑍍𑌪𑌿𑌤𑌸𑌨𑍍𑌨𑌿𑌧𑌾𑌨𑌃 ।
𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑍍𑌯𑌾 𑌸𑌮𑌾𑌲𑌿𑌙𑍍𑌗𑌿𑌤𑌵𑌾𑌮𑌭𑌾𑌗𑌃
𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑍀𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌂 𑌶𑌰𑌣𑌂 𑌪𑍍𑌰𑌪𑌦𑍍𑌯𑍇 ॥"

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா

என்னும் ஸ்ரீ அஹோபில மடத்துப் பத்ரிகையைப்பற்றி

ஸ்ரீ அழகியசிங்கரின் ஆசாஸந அநுசாஸநங்கள்.

𑌶𑍍𑌰𑍀𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌪𑍍𑌰𑌿𑌯𑌾 𑌶𑍍𑌰𑍀𑌮𑌨𑍍𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌕𑌰𑍁𑌣𑍋𑌦𑌿𑌤𑌾 ।
𑌶𑍍𑌰𑍀𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌕𑌟𑌾𑌕𑍍𑌷𑍇𑌣 𑌜𑍀𑌯𑌾𑌦𑌾𑌚𑌨𑍍𑌦𑍍𑌰𑌤𑌾𑌰𑌕𑌮𑍍 ॥
𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌪𑌾𑌦𑌭𑌕𑍍𑌤𑌾𑌨𑌾𑌂 𑌗𑍇𑌹𑍇 𑌗𑍇𑌹𑍇 𑌸𑌦𑌾 𑌵𑌸𑍇𑌤𑍍 ।
𑌶𑍍𑌰𑍀𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌪𑍍𑌰𑌿𑌯𑌾 𑌹𑍍𑌯𑍇𑌷𑌾 𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌪𑍍𑌰𑌿𑌯𑌯𑌾 𑌸𑌹 ॥

[ஸ்ரீ ந்ருஸிம்ஹனுடைய கருணையால் உண்டாகி இருக்கும் இந்த "ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா" என்னும் பத்ரிகை, அந்த ந்ருஸிம்ஹனுடைய கடாக்ஷத்தாலும் ஸங்கல்பத்தாலும் சந்த்ரன் நக்ஷத்ரங்கள் உள்ளவரையில் அவை போலவே சிறப்புடன் வாழக்கடவது.

நம் ந்ருஸிம்ஹ பக்தகோடிகளின் க்ருஹங்கள்தோறும் இந்த "ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா" என்னும் பத்ரிகை, ஸ்ரீந்ருஸிம்ஹ ப்ரியையாகிற மஹா லக்ஷ்மியுடன் நித்யமாய் வஸிக்கக்கடவது.]

::o::

189244
00 003

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீ ஸங்கல்ப ஸூர்யோதயம்

[7-ம் அங்கம்]

[சென்ற ஸஞ்சிகையின் தொடர்ச்சி]

[ஸ்ரீ. உப. A. V. கோபாலாசார்ய ஸ்வாமி M.A., B.L., அட்வோகேட், திருச்சி.]

" ஸம்ஸாவய நய-ஸ்ரீவ-ஸ: ஸூணயா நஸொயா
ஊக்ஷஸ்ஸ நவ ஸணாமூயஸாஜக ந்யாழ ।
விஸ்ஸம்ஸதெ ப ஹ ஸஊ வ ஸ்ரீதி வ ந்த ஹொ ம:
பெஷா க நா த ஸ ஸவ தீம் ஸிரஸா உயாதி ॥ "

இது ஸ்ரீஸ்துதியில் 10-வது ச்லோகம். உயஸ்ரீவஸ:—மத்ஸ்யாவதாரம் செய்து மதுகைடபரை ஸம்ஹரித்து வேதங்களை மீட்டு ப்ரஹ்மாவுக்குத் தந்தவர். பாற்கடல் கடைந்ததற்கும் முன்னுள்ள அவதாரத்தைக் குறிக்கிறார். கூர்ம ரூபியாக மந்தர மலையைத் தாங்கிக்கொண்டிருக்கையில் மற்றொரு திவ்ய ரூபத்தோடு தேவர்கள் மத்தியில் நின்று தாமும் இழுத்துக் கடைந்தார். 'யதுய ஊம்ஹொயிரஊம்யி'—லக்ஷ்மிக்காகப் பாற்கடலைக் கடைந்தது. அந்த வ்யாபாரத்தில் ஸரீர த்வயத்துடன் இரண்டு வ்யாபாரங்களையும் செய்தது. அங்கே அவதரித்த திருவுக்கு அபிஷேகம் நடந்தபின் அவள், பகவானை வரித்து மாலையிட்டு, அம்மாலையுடன் தானும் அத்திருமார்பில் நித்ய வாஸமாக வஸித்தாள்.

' வஸ்ரூதாம் ஸவஷெவா நாம் யயள வக்ஷஸ்ஸம் ஹரே:'

என்று ஸகல தேவர்களும் பார்த்துக்கொண்டே யிருக்கையில் ஹரியின் திருமார்பில் ஏறிக்கொண்டாள்.

' அமெ ம ஹ த ஊ ஸ்ஸாஸவிஜமயெ ஹ உ ஸீமெ தீக்ஷணாழ '

என்றபடி, இவளை பத்மாஸநத்தில் எழுந்தருளப்பண்ணி அபிஷேகம் செய்தார்கள். அந்த ஸிம்ஹாஸநத்தைவிட்டுப் பகவானுடைய வக்ஷ: பீடத்திலேறி, அதை விட்டு, 'இறையும் அகலகில்லேன்' என்று அங்கேயே நித்யவாஸம் செய்துகொண் டிருக்கிறாள். 'அலர்மேல்' [ஸாஸிஜமய பீடத்தின்மேல்] இருந்ததை விட்டு, எம்பெருமானுடைய திருமார்பு பீடத்தின்மேல் உறைந்தாள்.

ஸூணயாகஸொயாக ஸம்ஸாவயநு—ஆசைப்படாதவர் போலும், உதாஸீநர் போலும், நிரபேக்ஷராகப் பகவான் நின்றார். இவர் நிரபேக்ஷராயிருப்பதைப் பார்த்தே, அவளுக்கு இவரையே வரிக்கவேண்டுமென்று ஆசையுண்டாயிற்று.

'வவெ வஶ ஸவெ௨ஹஷணொஶவெக்ஷிதம்
ஶ௨ா௨ஷகஷடம் நிஶவெக்ஷஶீஸ்தழ' என்றும்,

"தஸ்யாஸ்ஸவெஶ உஶதீம் நவக்ஜ ௨ாஶம்
௨ாநுநயஷ வ தவஶஶய ஹிஶொவவஷெழ।
தஸ்யெள நியாய நிகடெ தஷஶ ஸ்வயா௨
ஸவீ ஜஹாஸ விக்ஸநயதெந யாதா॥"

என்றும் சுகர் பாடினார். உலகத்திலுள்ள உத்தம குணங்களெல்லாம் பகவானையே அபேக்ஷித்து ஆசைப்பட்டு வரித்து, அவரிடம் குடிகொண்டன. அப்படியிருக்கும்போது, ரமாதேவி எப்படி அவரை ஆசைப்படாமலும், அவரிடமே நித்யமும் குடிகொள்ளாமலும் மிருப்பாள்? அவர் நிரபேக்ஷரைப்போல் பராக்காய் இருந்தாலும், இவள் அவரையே ஆசைப்பட்டு வரித்தாள். தேனுக்கு ஆசைப்பட்டு வந்து பருகி மதித்த வண்டுகளோடு கூடிய 'வைஜயந்தீ' என்னும் மாலையை வருணன் அவள் கையில் கொடுத்தார். அப்பொழுது அலர்ந்த செந்தாமரை மாலையும் கையுமாய் அவள் அருகே வந்தாள். அந்த மாலை அவர் தோள்களை அடைய ஆசைப்படுகிறது.

'உஶதீழ'—ஆசைப்படும் மாலையை. அவர் கழுத்திலேற ஆசைப்பட்டு வண்டுகள் மூலமாய் ஆநந்த கானம் செய்யும் மாலையை, அவர் திருத்தோளில் ஸமர்ப்பித்துப் பக்கத்தில் நின்றாள். இவளுக்கு ஏற்பட்ட நித்யவாஸமான இடம் அவரது திருமார்பு. இவள் இப்படிக் காட்டிய ப்ரணயத்தை யெல்லாம் 'ஹுணயாநஶொயாக' என்பதால் ஸூசிக்கிறார். இவளுடைய இத்தனை ப்ரணயாவிஷ்கரணத்தைப் பகவான் அநுஸரிக்காம லிருப்பரோ? 'யயள', 'யாதா' என்று பராஶரரும் சுகரும், திருமார்பில் இவள் சென்று வீற்றிருந்தாளென்றே பாடினார்கள். இவள் காட்டிய ப்ரணயத்தை அநுஸரித்து அவர் தக்ஷிணராய்த் தம் திருமார்பில் இடமளித்துப் பஹுமாநித்தார். வஶணாலயழ—ஸாகரம், பாற்கடல். கடலரசன் பெண் இவள். அக்கடலரசர் அரச ரூபமாய் நின்று சிவந்த பட்டாடைகளை உடுக்கத் தந்தார். 'வஶணாலய ஶாஜ கநூாழ' என்பதால் இவைகள் ஸூசிக்கப்படுகின்றன. திரு இருந்த இடம் ஆலயமே. 'வருணன்' என்னும் பதத்தால், அவன் வைஜயந்தி மாலை கொடுத்தது ஸூசிப்பிக்கப்படுகின்றது. இந்தப் பூமிதேவிக்குத் தகப்பன் இல்லை. இவளுக்கு வருணாலயமான ஸமுத்ரமே ஆடை. 'கடலுடுக்கை'. பாற்கடல் கடைந்ததற்கு அடுத்த அவதாரம் வராஹாவதாரம். இவள் கிடந்த இடத்தைத் தேடிப் பகவான் வந்தார். இவளைத் தூக்கிக்கொண்டு மேலே வந்து, இவளுடைய விபூதிகளெல்லாம் முன்போலவே விரியச்செய்து நிலை நிலைநிறுத்தினார். இருவரும் இவருக்குப் பத்நிகளே. இந்தப் பத்நிக்கு, லக்ஷ்மியைக் காட்டிலும் அதிகமாகப் பஹுமாநத்தைக் காட்டுகிறார். *

* இக்கருத்தை விராதன் வாயிலாகக் கம்பர் காட்டும் ரஸோக்தி யாவர் மனத்தையும் பரவச மாக்கும்.

"அரவாகிச் சுமத்தியால் அயிலெயிற்றின் ஏந்துதியால்
ஒருவாயின் விழுங்குதியால் ஓரடியால் ஒளித்தியால்
திருவான நிலமகளை யிஃதறிந்தாற் சீறுளோ
மருவாரும் துழாயலங்கல் மணிமார்பின் வைகுவாள்."

'𑌮𑍂𑌰𑍍𑌧𑌾𑌨𑌂 𑌪𑌤𑍍𑌯𑍁𑌰𑌾𑌰𑍋𑌹 𑌪𑍍𑌰𑌜𑌯𑌾 𑌚 𑌵𑌿𑌰𑌾𑌡𑍍𑌭𑌵'

என்ற வேத ஆசீர்வாதத்தை விவாஹ ப்ரகரணத்தில் ஓதுவர். 'பர்த்தாவின் தலையில் ஏறு.' இவள் ஏறமாட்டாள். அவர் இவளைத் தம் தலையில் வைத்துத் தாங்குகிறார். அவர் ஸஹஸ்ர ஶீர்ஷனான புருஷன். ஆயிரம் தலைகளால் இவளைச் சுமக்கவேணும். அப்படியே சுமக்கிறார். எப்படி? இவருடைய ஆத்மா ஶேஷன் என்னும் உத்தம ஞானி.

'𑌜𑍍𑌞𑌾𑌨𑍀 𑌤𑍍𑌵𑌾𑌤𑍍𑌮𑍈𑌵 𑌮𑍇 𑌮𑌤𑌮𑍍', '𑌶𑌰𑍀𑌰𑌭𑍇𑌦𑍈𑌸𑍍𑌤𑌵 𑌶𑍇𑌷𑌤𑌾𑌂 𑌗𑌤𑍈𑌃'
அநந்த போகியான ஶேஷனுடைய எல்லா ஶரீரங்களும் இவருக்கே ஶேஷம். ஶரீரியான அநந்தனுக்கு இவருக்குப்போல் அத்தனை ஶேஷமல்ல. ஶேஷன் ஶரீரம் இவர் ஶரீரமே. அவனுக்கு அதில் அபிமானமே யில்லை. இவருக்கு அதில் ஸ்வஶரீராபிமானம். அவனிடத்தில் தான் என்றே அபிமானம்.

𑌶𑍇𑌷𑌾𑌤𑍍𑌮𑌨𑌾—ஶேஷனாகிய தன் ஶரீரத்தால்; தானேயாகிய ஶேஷன் மூலமாக.

𑌭𑌵𑌤𑍀𑌂 𑌶𑌿𑌰𑌸𑌾 𑌨𑌿𑌤𑍍𑌯𑌂—உம்மை ஶிரஸ்ஸால் தாங்குகிறார்; நித்யமாக வஹிக்கிறார். லக்ஷ்மிக்குத் திருமார்பில் நித்ய வஹநம் போல.

𑌬𑌹𑍁𑌵𑌿𑌧𑌵𑌕𑍍𑌤𑍍𑌰𑌭𑍋𑌗𑌃—என்பதற்கு, 'அநேக வகையான ஸந்தோஷத்தை அடைந்தவராய்' என்றும், 'அநேக முகங்களோடு கூடிய ஸர்ப்ப

[இதன் பொருள்] அழகு பொருந்திய பூமிப் பிராட்டியை ஆதிசேஷனை (நீ கீழிருந்து) தாங்குகின்றாய்; கூர்மையான கோட்டினால் எடுக்கின்றாய்; ஒரு வாயில் விழுங்குகின்றாய்; ஒரு திருவடியால் அளந்து மறைக்கின்றாய்; (இவ்வாறு அவளிடத்திலே அன்பு பாராட்டுதலை, மணம் பொருந்திய திருத்துழாய் மாலைபணிந்த (பகவானது) அழகிய திருமார்பில் இருக்கின்ற திருமகள் அறிந்தால் கோபிக்கமாட்டாளோ? [அதாவது: ஊடல் கொள்ளாளோ?]

[குறிப்பு] பூமிதேவியைக் கோட்டினால் எடுத்தது வராஹாவதாரத்திலும், வாயினால் விழுங்குதல் ப்ரளய காலத்திலும், ஒரு திருவடியால் அளந்து மறைத்தது த்ரிவிக்ரமாவதாரத்திலும் என அறிக. திருவான நிலமகள்—வஸுந்தரா.

"ப்ரபோ! திருமகள் அறியாதிருக்கும்படி வெவ்வேறு வடிவு கொண்டு பூமி தேவியைக் கொண்டாடுகின்றாய்; அத்திருமகள் தானும் பக்கத்தினளோ? நின் வக்ஷஸ்தலத்தினளாகவன்றோ இருக்கிறாள்; அவளும் அறியாதில்லாது நீ செய்கின்ற இம்மாமாயம் ஒரு ஸமயம் ஸ்ரீ தேவி அறியக் கிடப்பின் கோபங் கொள்ளாளோ! நின் ஸாஹஸச் செய்கை நன்று! நன்று!" என்று விராதன் எம்பெருமானை ஸ்ரீ. சக்ரவர்த்தித் திருமகனது வரம்பிலாற்றலுடைமையைத் துதிக்கின்றான். தவிர:

"அரவமாகி மேலுகந்தாய்- இருகொம்பினால் சுமந்தாய்- சரணமதனால் அளந்தாய்-
பெருநில மங்கைமேல் வைத்த தாஹமோ—இளையாள் மோஹமோ-
ஏகமாய் இருக்கின்றவள் வேகமே செய்யாளோ உன்னை?"

என்னும் அருணாசலக் கவி ராம நாடக கீர்த்தனையும் இங்கு ரஸித்து இன்புறற் குரியது
[கோ. ஸ.]

ஶரீரத்துடன்' என்றும் பொருள். 'ஶேஷாங்கநா' — தாஸ ஸ்வரூபத்தோடு; தாஸனைப்போல்.

விஶ்வம்பரா–அநந்த ப்ரஜைகளைக் கர்ப்பத்தில் தரித்துப் பெறுகிறவளே! 'விராட்' என்னும் சந்தஸ்ஸில் ஒரு பாதத்துக்குப் பத்து உயிர் அக்ஷரங்கள். 'ஜீவத் ஸுபுத்ரராய்ப் பத்து ப்ரஜைகளைப் பெற்று, விராட் சந்தஸ்ஸைப் போல் நான் விராஜநம் செய்யவேணும்; விளங்கவேணும்' என்று வேத ஆசீர்வாதம். க்ருஷ்ணனுக்கு ஒவ்வொரு பத்நியினிடம் பத்து ஆண்பிள்ளைகள். இந்தப் பூமி தேவிக்கு ப்ரஜைகள் அநந்தமான இந்த விச்வம் முழுவதும் என்ற ரஸத்தை 'விஶ்வம்பரே' என்பது காட்டுகிறது.

ஸுமதி.–எப்படி இந்த மஹாவராஹர் ப்ரளய ஸமுத்ரத்தில் அழுந்தி முழுகிப் போன பூமியை மேலே தூக்கித் தன் நிலையில் நிறுத்துகிறாரோ, அப்படியே தாங்களும் ஸம்ஸார மெனும் மஹா ஸமுத்ரத்தில் மூழ்கிக் கிடக்கும் ஜீவனை மேலே தூக்கித் தன்னுடைய ஸ்வபாவமாகிய அந்த முக்தி நிலையில் நிறுத்தி உஜ்ஜீவிக்கச் செய்யவேணும். [ப்ரள்யாபத்திலிருந்து பூமியை மேலே தூக்கிக் காப்பாற்றுவது, ஸம்ஸாரத்திலிருந்து ஸம்ஸாரிகளை மேலே தூக்கி முக்தி வீடாகிய கரையைச் சேர்ப்பதற்கு ஸூசகமாகும்.]

ராஜா.–இன்னும் இதுபோன்ற வேறு அத்புத ரூபத்தையும் பார்ப்போம்.

வ்யவஸாயர்.–அப்படியே. ப்ரஹ்லாதரை ஸர்வ விதத்தாலும் ரக்ஷித்த திவ்ய நரஸிம்ஹ ரூபத்தை ஸேவிக்க ஆசைப்படவேணும். காட்டவேணுமென்று கேட்ட அஸுரனுக்குத் தர்ஶநம் கிடைத்தது. தித்ருக்ஷை வேணுமென்பதைக் காட்ட 'தித்ருக்ஷிதவ்ய:' என்றது. பரம புருஷனையே ப்ரஶம்ஸித்துக் கொண்டிருந்த மகனை, அப்படி ப்ரஶம்ஸித்ததற்காகவே நிந்தை செய்தான் ஹிரண்யாஸுரன். 'உன் புருஷோத்தமன் எங்கேயடா?' என்று கேட்க, 'ஸர்வத்ர' [எங்கு முளன்] என்று மகன் பதில் சொன்னான். 'இலனவன்' என்பது தகப்பன் வாதம். 'உளனவன்' என்பது மகன் ப்ரதிவாதம். 'எங்கு மிலன்' என்பதற்கு, 'எங்கு முளன்' என்று ப்ரதிவாதம்.

ராஜா—அதன் மேல் ?

வ்யவஸாயர்–

" [illegible]
[illegible] ।
[illegible]
[illegible] ॥ "

" எங்குமுளன் கண்ணனென்ற மகனைக் காய்ந்து
இங்கில்லை யாலென் றிரணியன் தூண்புடைப்ப

அங்கப் பொழுதே யவன்வீயத் தோன்றியவென்
சிங்கப் பிரான்பெருமை யாராயும் சீர்மைத்தே?"

என்னும் திருவாய்மொழிப் பாசுரம் ஸ்வாமி திருவுள்ளத்தில் ஓடுகிறது.

கிமித்ருஹஸிதி— 'இங்கில்லையால் என்று'. ஹிரண்யகஸ்யபுநா தாடித ஸ்தம்ப: — 'இரணியன் தூண்புடைப்ப'. ஸபதி ஜ்ரும்பித: ஸ்தம்ப:—'அங்கப் பொழுதே தோன்றிய'. 'உன் புருஷோத்தமன் எங்கே?' என்பது வினா. 'ஸர்வத்ர' [எங்குமுளன்] என்று மகன் பதில். 'க்ருஷ்ணனிடமே ப்ரஹ்லாதனுடைய மநஸ் லயித்திருந்தது' என்பது பராஸரர் பணிப்பு. அதை அநுஸரித்து 'எங்குமுளன் கண்ணன்' என்று ப்ரஹ்லாதன் ப்ரதிஜ்ஞை போல ஆழ்வார் அநுபவம். பராஸரர் 'க்ருஷ்ணன்' என்றதை ஆழ்வார், 'கண்ணன்' என்பதால் காட்டுகிறார். அவன் கேட்டது பரிஹாஸச் சிரிப்புடன். அச்சிரிப்புக்கு அட்டஹாஸ ப்ரகடநத்துடன் வெளிப்புறப்பாடு. 'சிரித்தது செங்கட்சீயம்' என்பர் கம்பர். 'தீவ்ர ஹாஸ ஸ்தாயம்' 'ஸட்டாவயவ தா ஜவ தா: வராவ தாமு' 'ஸ்வாந்த ஸ்தடாகௌஸ்ர ஜ்ரும்பிதா நநம்' என்ற சுகர் வர்ணநச் சொற்கள் இங்கு ஸ்வாமி திருவுள்ளத்தில் ஓடிவருகின்றன. 'வாஸ: ஸ்வாஸதி'—இதோ எதிரே ஜ்வலிக்கிறு ரென்று காட்சியாகவே அநுபவம்.

ராஜா:—மஹாமோஹனை நிரஸிப்பதற்காகப் பாபங்களை யெல்லாம் போக்கவேண்டுமென்று இவரை ப்ரார்த்திக்கிறேன்.

வ்யவஸாயன்:—இதோ இங்கே பகவானாலே தம் ஸங்கல்ப மாத்ரத்தால் நிர்மாணம் செய்யப்பட்டதுபோல மிக அழகிய பதவிந்யாஸங்களோடு கூடிய ச்லோகாக்ஷர மாலைகள் காணப்படுகின்றன. எங்ஙனே யென்னில்:

"ப்ரஹ்லாத ஹ்லாத நாம்நி ப்ரண தவஸ ஜநப்ராண ந ப்ரீண நாம்நி
ப்ரத்யுஜ்ஜ்வலஸ்தம்ப ஸீம ப்ரஸபவ நவடா வொஷணாஸம்பராணி ।
க்ஷுண்ணஸ்த்ரீ ஸவ்யாம்பரீதி க்ஷார வாரிஷ ராத கீ பி தக்ஷிணஸந்த்ரா
ர ஸத்தீ திவ்யவொஹம் விஜயதா நரஹரொஸ டாஹாஸாதூதா தி"

இந்த ச்லோகத்திலும், இதற்கு அடுத்த தஸாவதார ச்லோகத்திலும் பகவானே ச்லோகங்களை அநுக்ரஹித்ததாக ஸ்வாமியின் கருத்துப் போலும். அத்புதமாக எதையும் ஸடனை செய்யும் அத்யத்புதமான அவதாரம்.

ப்ரஹ்லாத ஹ்லாத நாம்நி—இக்குழந்தைக்கு ப்ரஹ்லாத னென்னும் திருநாமம் உண்மையானது. உலகத்தார் ஸந்தோஷிக்கும் பாமர விஷயங்களில் இவர் களிப்பதில்லை. பகவத் விஷயத்திலேயே எல்லாக் களிப்புக்களையும் பூர்ணமாக உடையவர். ப்ரக்ருஷ்டமான பகவான் விஷயத்திலேயே ப்ரக்ருஷ்டமான ஹ்லாதத்தை (ஸந்தோஷத்தைப்) பிறவிக்கு முன்னிருந்தே (கர்ப்பத்திலிருந்தே) உடையவர். 'ஸௌகர்ட்யம்பராஃ:' என்று இவர் ஸம்ஸாரிகளைத் தன் பாவ ஸிஷ்யர்களுக்கு வர்ணிப்பது. இவரோ எப்பொழும் ஆத்மாராமர். "உட்கார்ந்திருக்கையிலும், நடக்கையிலும், உண்ணும்போதும், ஸயநித்திருக்

189244

கும்போதும், தண்ணீர் அருந்தும்போதும், பேசும்போதும், இந்த வ்யாபாரங்களை யெல்லாம் அறிவதேயில்லை. அவருக்கு எப்படி இவற்றின் அறிவு இருக்கும்? கோவிந்தனால் ஆசையுடன் கட்டியணைக்கப்பட்டு, அந்த ஹ்லாதத்தில் மூழ்கி யிருக்கையில், அவருக்கு வெளி நினைவு எப்படி இருக்கும்?'' என்பது சுகர் வர்ணம். சில வேளைகளில் ஆழ்வார் பகவானுடைய அணைப்பு நின்று அவனை மனத்தால் த்யானிக்கவேண்டி நேர்ந்தபோது ஒரு ஸமயம் அழுவர்; ஒருபோது சிந்திப்பர்; ஒருபோது த்யாநாநந்தம் பொங்கி உரக்கப் பாடுவர். எப்பொழும் பகவானுடைய ஆலிங்கநத்தாலும் இன்ப த்யாநத்தாலும் மகிழ்ந்து வந்த ப்ரஹ்லாதனையும் முன்னிலும் அதிகமாக மகிழச்செய்ய அத்யத்புதமான பக்தமோஹநமான நரஸிம்ஹ ரூபத்தை அமைத்து அவருக்கு ஸேவை ஸாதித்து அவரை ஹ்லாதநம் செய்தார்; ப்ரஹ்லாதனையும் ஹ்லாதநம் செய்தார். 'பரித்ராணாய ஸாதூநாம்' என்றபடி பக்தர்களைத் திவ்யமங்கள விக்ரஹத்தால் ஆநந்திப்பிப்பதே முக்யமான அவதார ப்ரயோஜநம். 'ஸாதூநாம்'—இவரோ நிகரற்ற ஸாது; ஸாமாந்ய ஸாதுவல்ல. இவரை இன்புறச் செய்ய அதி மநோஹரமான ரூப ஸேவை. 'ந்ருஸிம்ஹம் பீஷணம்' என்று பயத்தையும் ப்ரஹ்மாதிகளுக்கும் உண்டுபண்ணும் ரௌத்ராகாரமும் உண்டு. இவருக்கு முழு பத்ர (ஹ்லாதநமே) பீஷணமே யல்ல.

"ஹேதுஸ் த்வாநவதிவோ: பரிபாலநாய ஸத்ரம் ந்ருஸிம்ஹ கலஹநாம்"

என்ற வாதராஜ பஞ்சாசத் ச்லோகம் இக்கருத்துக்குச் சான்றாகும். ப்ரஹ்லாதனுக்கு இந்த வேஷம் முழுவதும் பத்ரமே. ந்ருஸிம்ஹனுடைய அட்டஹாஸாத்புதங்களுக்கு இவையெல்லாம் விசேஷணம். அவருடைய ரூபம் மட்டுமல்ல. அவருடைய அட்டஹாஸங்களும் இவரை இன்புறச்செய்தன. அட்டஹாஸங்களும் மந்தஹாஸங்கள்போல் இவரை ஆநந்தித்தன வென்று ரஸம். இவர் அஸுர ஜாதியாயிருந்தும், [ஜஹிதாஸுரோ ஸ்வபாவ:'] அஸுர ஸ்வபாவ லேசமில்லாதவர். பிறவி மட்டும் அஸுர குலத்தில். அஸுர சிசுவைக் காப்பாற்றுவதற்கே செய்த அவதாரம் இது. அஸுர ஜாதியானால் என்ன? இவரோ என்றைக்கும் ஸர்வ ஸாதுக்களிலும் ச்ரேஷ்டர். 'பரித்ராணாய ஸாதூநாம்' என்னுமிடத்தில், ப்ரஹ்லாதவசநத்தைப் பூஜையாகக் கொண்டு, இவர் ஒருவருக்காகவே அவதாரம் என்றும் சொல்லலாம்.

ப்ராணதஸ்ஸுரஜநப்ராணநஸீணநாதி—இவர் தூணிலிருந்து வெளிக்கிளம்புமுன், அதி பீஷணமான ஒரு சப்தம் கிளப்பி, அதனால் அண்ட கடாஹமே வெடிப்பதுபோல் அதிர்ந்து, ப்ரஹ்மாதி லோகங்களுக்கும் அந்த சப்தம் எட்டி, அவர்கள் தங்கள் லோகங்களுக்கு ப்ரளயம் வந்து விட்டதாகப் பயந்து உயிர் இழந்தவர்கள்போல் இருந்தவர்கள், வெளியே ஸ்வாமி எழுந்தருளி தைத்யனோடு போர்புரிந்து அட்டஹாஸம் செய்கையில்தான் அவர்களுக்கு உயிர் வந்தது. இவர் அட்டஹாஸங்கள் அவர்களுக்கு முன் பயத்தால் போன உயிரைத் திருப்பிக்கொடுத்தன என்பதை 'ப்ராணநாதி' என்பது காட்டுகிறது. போன உயிர் வந்து உடனே ஸந்தோஷமும் அடைந்

தார்கள். இப்படி, மஹாஸுரனேடு வீரச்செயலான யுத்தத்தை அவர்கள் முன்பு கண்டதில்லை. அஸுரனைக் கொன்று தங்களுக்கு உயிர்ப்பிச்சை கொடுத்ததில் அவர்களுக்கு ஸந்தோஷம். ப்ரஹ்லாதன் அஸுரனுக்கும் பயப்படவில்லை; தன் உயிர்போமே யென்றும் பயப்படவில்லை. கம்பம் பிளந்த ஶப்தம், அவருக்கு அதி ஸமீபத்திலிருந்தும் அவர் பயப்படவில்லை. தன் உயிர் தப்பியதே யென்று ஹ்லாத மில்லை. பகவானுடைய திவ்ய திருமேனிக் காட்சியாலேயே ஹ்லாதம் என்பதை அவர் விஷயத்தில் 'ஹ்லாதநாமி' என்றும், ஸுரஜநங்கள் விஷயத்தில் 'ப்ராணந க்ஷீணநாமி' என்றும் பாடுவதால் விளக்குகிறார். முனிவாஹந போகத்தில் 'அமரர்க்கரிய' என்பதற்கு, 'தன்னாலே ஸ்ருஷ்டருமாய் உபக்ருதருமான தேவர்கள் தான் காரண பூதனுமாய் உபகாரகனுமாய் நிற்கிற நிலையை அறியமாட்டாமையாலே அவர்களுக்கு ப்ரஹ்லாதன் அணுகி அநுபவித்தாற்போல அணுகவும் அநுபவிக்கவும் அரியனாயிருக்கிற' என்கிற ஸ்வாமி உரையால் இக்கருத்து தெளிவாகிறது. 'ஸுரஜந' என்பதால், ப்ரஹ்லாதன் ஜாதியில் அஸுரஜநமென்று ஸூசனை.

ஸ்ருத்யௌக........ – ப்ரளய ஸமயத்தில் பயங்கரமான மேகக் கூட்டங்களின் ஆடம்பரங்களையும் தோற்கடிப்பதாயும். அநேக மேகங்களின் இடிக்கும் ஒலியிலும் மேற்பட்டது. மேகமண்டலத்தை வ்யாபித்த திருமேனி. 'ஸடாவதூதா ஜலதா பராபதந்'—[இவர் கேஸரங்களால் மேகங்கள் தள்ளப்பட்டு விழுந்தன] என்றார் சுகர். 'க்ஷுப்த ஸப்தாம்போதி'— ஏழு ஸமுத்ரங்களும் சேர்ந்து கொந்தளித்தன. "அம்போதய: ஶ்வாஸஹதா விசுக்ஷுபு:" என்ற சுகர் ச்லோகத்தின் ஸூசநம்.

க்ஷுரபரோக்ஷ நவக்ரீடித க்ஷுண்ணஶத்ரோ: ந்ருஹரே:—கத்திக் கூரான நகங்களால் விளையாட்டாகக் கிழித்து ஶத்ருவை மாய்த்த ந்ருஸிம்ஹனுடைய. பாய் முடைபவன் கோரையை நகத்தால் கிழிப்பதுபோல் கிழித்தான். 'நார் கிழிப்பாரதுபோல நன்ருக கிழித்திட்டு'. 'எந்த நகங்கள் தேவிமார் ஸ்தநங்களில் க்ஷதங்களால் பங்கடையுமோ, அந்தனை ம்ருதுவான லீலாநகங்கள்' என்று வர்ணித்தார் மாக கவி. 'கருடன் பாம்பைக் கிழிப்பதுபோல்' என்பது சுகர் வர்ணநம்.

அட்டஹாஸாத்புதாநி அஸ்மத்பீதிம் விதுந்வந்து—இவருடைய அட்டஹாஸாத்புதங்கள் நம் பயத்தைத் தொலைக்க வேணும். என்ன பயம்? ஸம்ஸார பயம். அதிலிருந்து அபயம் தரவேணும். "உம்முடைய அதிபயமான ரூபத்தைக் கண்டு நான் பயப்படவில்லை. ஸம்ஸார சக்ரத் துன்பத்தினிடமிருந்தே நான் பயந்து உம் பாத மூலத்தை அடைந்தேன். உவந்த உள்ளத்தனாய் என்றைக்கு என்னைக் கூவி உம் திருவடி ஸேவைக்கு அழைத்துக் கொள்வீரோ'?" என்ற ப்ரஹ்லாத ஸ்தோத்ரப் பேச்சை அநுஸரிக்கிறார். 'என் சிங்கப்பிரான்' என்றார் ஆழ்வார்.

ராஜா—மகிழ்ச்சியுடன் அந்த ச்லோகாக்ஷரங்களை ஸேவிக்கிறார்.

[தொடரும்]

ஸ்ரீ:

ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேசிகாய நம:

உறக்கம் தவிர்த்த உத்தமி

(AWAKENING FROM THE SPIRITUAL SLUMBER)

[ஸ்ரீ. உப. பண்டிட் N. S. தாதாசார்யரால் ஸங்க்ரஹிக்கப் பெற்றது.

[இது, சென்னை, ரிடயர்ட் ஹைகோர்ட் ஜட்ஜ் தேசிக தர்சந ரத்நதீபம் ஸ்ரீ. உப. வி. வி. ஸ்ரீநிவாஸய்யங்கார், தஞ்சை ஸ்ரீ வைஷ்ணவ ஸபையின் ஆதரவில் நடத்திய உபந்யாஸத்தின் ஸங்க்ரஹம்.]

ரஸிகர்களே! மஹான்களே!

இன்று மஹான்களான ரஸிகர்கள் கூடியிருக்கும் இந்த ஸபையில் எனக்குப் பேச ஸமயம் கிடைத்ததுபற்றி மிகவும் இன்ப மடைகிறேன். எனக்குத் தெரிந்த சில விஷவங்களை உங்கள் முன்னிலையில் இடுகிறேன். இவ்விதம் ஒன்று கூடி அவரவர் கருத்துக்களைப் பரிமாறிக்கொள்வதே எனக்குச் சிறப்பாகத் தோன்றுகிறது. இதுவே ஒரு காலக்ஷேப கூடம். மனிதன்—அதிலும் கல்வியறிவு செறிந்தவர்கள் – குருவினிடமிருந்து அறிந்துகொண்ட விஷயங்களுடன் நிம்மதி பெறக்கூடாது. ஈச்வரன் நமக்குப் பகுத்தறிவை அளித்திருக்கிறுன். அதில் நாம் சிறிது கர்வப்பட வேண்டியவர்களாகவே இருக்கிறோம். ஆகவே, நாம் நம் பகுத்தறிவைச் செலுத்தி நம்மையே நாம் பல கேள்விகள் கேட்டு விஷயங்களை ஆராயவேண்டும். உள்ளத்தே உறைந்திருக்கின்றுன் உத்தம வள்ளல் அந்தர்யாமி. அவன் பதில் அளிப்பன். ஸந்தேஹம் வேண்டாம். அத்துடனின்றி, நாம் அறிந்த விஷயங்களை ரஸிகர்களான பண்டிதர்கள் முன்னிலையில் கூறிக் கருத்துக்களை விவேசநம் செய்ய வேண்டும். உணர்ந்த உண்மையை உள்ளத்தே வைத்திருத்தல் கூடாது.

ஸந்தோஷாய ச விச்ரம்யதி ச மஹா: ஸுஹ்ருதய்யா க வித்யாம்
நித்யம் பந்தே நிசமயதி அ ஸ்வாத்மஸம்பத்யாஹ்ருதாநி ।'

மஹான்கள் காலத்தைக் களிப்புடன் கழிக்கப் பல பண்டிதர்களுடன் கூட இருந்து சாரீரிக வித்யையை விமர்சநம் செய்கிறுர்கள். நாள்தோறும் அருங் கருத்துகளைப் பலரும் அறியும் வண்ணம் வெளியிடுகிறுர்கள். ஆகவே இன்று நான் நாமங்கை நப்பின்னையின் தேன்மொழித் திருப்பாவையைப் பற்றிச் சில கருத்துக்களை வெளியிட விரும்புகிறேன். மஹான்கள் செவிசாய்க்க வேண்டுகிறேன்.

"ஸ்ரீநிவாஸ க்ருபாபாத்ரம் நாராயண ஜயஸம்ச்ரயம் ।
க்ருஷ்ணதேசிக பாதாப்ஜம் வந்தே ப்ரஸ்ரவம் வரம் ॥"

திருப்பாவை 6 முதல் 15 வரை பாட்டுகள்

கோதை கவர்ந்த கூத்தன், குடமெடுத் தாடும் குறும்பன், கண்ணன் மகிழ்ந்து புகழ்ந்த மார்கழித் திங்கள்; மதி நிறைந்த நன்னாள். ஆயர்சேரி ஆய்ச்சியர் கூட்டம். வள்ளல் பெரும் பசுக்களின் வளம். செங்நெல் ஆடும் சிறு வயல். நெல் பூக்களை உண்ணத் துள்ளிக் குதிக்கும் கயல் வயல். இதுவே ஒரு சிறந்த க்ராம வனப்பு. திருப்பாவை முழுவதிலும் இவ்வழகே படர்ந்திருக்கிறது. பாவையில் படர்ந்த பண்பு, படிக்குங் கால் நம் உள்ளத்திலேயும் குடியேறிவிடுகிறது. அழித்தால் அழியாது. தூங்கினாலும் மங்காது. இவ்வழகை அநுபவித்த அருங்கோதை தன் அநுபவத்தைப் பலர் உவக்க அம்பலத்தி லிட்டாள். இது ஒரு சிறந்த ஸ்ரீ வைஷ்ணவ கீதை. இன்றுபோல் அன்றும் திருப்பாவை உத்ஸவம் எங்களூரில் நடந்தது. காணச் சென்றேன். கலந்திருந்தேன். ஆனால் அன்று பாடிய பாமணியைச் சோற்றுப் பாட்டென நினைத்திருந்தேன். அன்றறியேன் கோதையின் கூர்ந் தமிழை. போகட்டும்; இன்றாவது ஏதோ சிறிதளவு அதன் அருமையை அநுபவிக்க ஆக்கம் பெற்றேனே! ஆங்கிலத்தில் அருமையான சிறந்த நூல்கள் படித்திருக்கிறேன்; ஆராய்ந்து மிருக்கிறேன். ஸம்ஸ்க்ருதத்திலும் பயின்றிருக்கிறேன்; பல கேட்டு மிருக்கிறேன். ஆயினும் இன்று மூரி நிமிர்ந்து முழங்கிடுவேன். “திருப்பாவையைப்போல் எவ்வழகும் சொட்டும் அருமை நூல் எங்கும் கிடையாது. எதுகை, மோனை, ஒலி, பொருளமைப்பு, இசை, சுவை, நடை, இவற்றுள் எதைக் கூறுவேன்? அவைகளை அழைக்க வேண்டாம்; தேடவேண்டாம்; முத்துதிரும் முத்துமாலைபோல் படிக்குங்கால் தானாகவே உதிரும். என்? நீங்களே உணர்ந்திருப்பீர்கள்.

டென்னிஸன் என்ற ஆங்கிலக் கவியின் கற்பனைநாயகன், ஆறிரண்டும் அறியா ஒரு க்ராமவாஸியே. அக்கவி, க்ராமத்தின் கற்பனை மெருகிடுபவன். க்ராமக் கன்னிகளைக் கற்பனை யலங்கார மிட்டுக் கட்டிளங் காமக் கன்னி யாக்கிவிடுவன். அவ்விதமேதான் சொல்லிற்கும் கருத்திற்கும் எட்டா வண்ணம் எடுத்திட்டாள் எழில் மங்கை கோதை. இவள் ஒரு சொற்கவி மட்டுமல்ல; அரும் சிற்பியுமாவள். செய்யுளைப் படித்தால் போதும்; மனதில் படம் வரைந்திடுவள். சித்ரக்காரன் சித்தரிக்க முடியாத படம். ஒவ்வொன்றையும் எடுத்துரைத்தால் பொழுது நீண்டுவிடும் எனப் பயப்படுகிறேன். 240 அடிகள் இப்பாவை. இவ்வடிகள் முழுவதும் ஒருதடவை இருதடவை யல்ல; பல தடவை வாழ்க்கை முழுவதிலும் படித் தின்புறவேண்டியவை. அருமைக்கவி எனப் பாரோர் புகழப் பட்டம் பெற்ற ஷேக்ஸ்பியர் கூட இவளுக்கு ஒப்பாக நினைக்கவும் முடியாதவர். நான் பல தடவை அநுபவித்திருக்கின்றேன். இருந்தும் எனக்கு ஸமீபத்திலேற்பட்ட ஒரு அநுபவத்தை இங்குக் கூற விரும்புகிறேன். சில நாட்களுக்கு முன்பு என் வீட்டிற்கு என் அரும் அன்பர் ஒருவர் வழக்கம்போல் வந்தார். அவரைக் கண்டால் போதும். எதைப்பற்றியும் பேச எனக்குத் தெரியாது. திருப்பாவைதான் எங்கள் பேச்சில் முழுப் பங்கையும் எடுத்துக்கொள்ளும். கேஸ் விஷயமாய் வந்தவர்களுக்கு ஒரு வித

மாகப் பதில் கூறிவிட்டேன். உடனே எங்கள் திருப்பாவை தொடக்கம் பெற்றது. எங்கள் கருத்து சில ஸமயம் உறவாடும். சில ஸமயம் போட்டியிடும். முடிவில் விளையாட்டுக் குழந்தைகள்போல் ஒத்துப்போய்க் கூடிக் களிக்கும். அன்றைக்கு ஒரு பாட்டைப்பற்றி ஆராயத் தொடங்கினோம். பாவைக் கடல். கடலி னுள்ளே நல்மணிகள். எடுப்பதெல்லம் மணிக்கருத்தாய் இருக்கிறது. ஆம்; கடலின் இடையே காசாமணி கிடைக்குமோ? அறிந்த கருத்துக்களைக் கூறிக்கொண்டே வந்தேன். கண்டதென்ன? நான் கல் நெஞ்சன்தான். என் தோழர் ஓர் இளகும் வெண்ணெய் மனத்தர். அவர் அழத் தொடங்கிவிட்டார். உள்ளமாகிய வெண்ணெய் உருகிக் கண்களினிடையே ஆற்றுப் பெருக் கெடுத்துவிட்டது. உள்ளத்தை இழந்தார். உள்ளம் தான் கரைந்துவிட்டதே! வேறென்ன இருக்கும்? அவரைக் கண்டதும் நானும் கரைந்துவிட்டேன். பிறகு இரு நிமிஷம் மௌநம் நிலவிற்று. சுருங்கக்கூறின், என் வாழ்நாளில் நான் அநுபவித்த பேரின்பம் அந்த இரு நிமிஷங்களே.

இவ்விதம் ரஸ கநமான இப்பாட்டுக்களைப் படிக்குங்கால், அவை வெள்ளை விளிசங்கின் பேரரவம் ஒலிப்பதுபோல் இருக்கும். மெய்யறிவு மங்கி உறங்கும் நம்மை இச்சங்கநாதம் எழுப்புகிறது. ஆகவேதான் நான் இன்று உறக்கம் தவிர்க்கும் உத்தமி என நம் சிறு மாமகளைப் பெயரிட்டுப் பேசுகிறேன். நம்மை அவள் வெறும் தூக்கத்திலிருந்து எழுப்பவில்லை. ஆன்ம உறக்கத்திலிருந்தும் எழுப்புகிருள். Sleeping என்பது, இயற்கைத் தூக்கம். Slumber என்பது, தகாத இடத்திலும் தகாத வேளையிலும் தூங்குவது. அதனால்தான் நான் இன்று என் உபந்யாஸத்திற்கு Awakening from the spiritual slumber என்று பெயரிட்டேன்.

உலகில் மனிதன்தான் குற்றம் சாட்டப்படுகிருன். ம்ருகங்க ளல்ல. நம்மிடம் ஒரு பக்கம் ம்ருகத்தன்மையும் மற்றோர் பக்கம் தைவத் தன்மையும், நெல்லில் உமியும் அரிசியும் போல் கலந்திருக்கின்றன. மனிதன் தன் தைவத்தன்மையைத்தான் உணரவேண்டும்; உணர்ந்து உகக்கவும் வேண்டும். ம்ருகத் தன்மையைப் பிய்த்தெறியவேண்டும். சில ஸமயம் சில மனிதர்கள், தூக்கத்திலிருந்து தானே விழித்துக்கொள்வதும் உண்டு. சிலர், பிறர் எழுப்ப எழுந்திருப்பதும் உண்டு. உண்மை நேசன், தான் விழித்ததும் பிறரையும் எழுப்புவான். முக்கியமான ஸந்தர்ப்பங்களில் வீடேறித் தட்டியும் எழுப்புவான். இது வாழ்க்கையில் காணும் முறை. வேதாந்தமும் இதுதான். வாழ்க்கை என்பது வேதாந்த மாளிகைக்குப் படிக்கட்டல்லவா?

முன்பு தானகவே ஆன்ம உறக்கத்திலிருந்து விழித்து விண் பொருளைக் கண்டவர்கள் நம் ஆழ்வார்கள். அவர்கள் கருணைக்கடல்; அயர்வறு மமரர்கள்; அமுதன் அருளில் ஆழ்ந்தவர்களான அவ்வாழ்வார்கள் தம்மையும் மறந்து, தாளிட்டுத் தூங்கும் நம்முடைய உள்ளமாகிய வீட்டில் ஏறித் தாளிட்ட கதவைத் தானே தகர்த்து உள்புகுந்து புரட்டி எழுப்பினுர்கள். இது ஒரு

மாயனும் காணகில்லாக் கைம்மாறன்றே? இவ்விதமேதான் அரங்கன் அநுபவக் கொடியில் பூத்த பூங்கோதை, 6 முதல் 11 பாட்டுக்களால் நம்மை எழுப்புகிருள். அன்று விச்வாமித்ர முனிவர் ஸ்ரீ சக்ரவர்த்தித் திருமகனை

'கௌஸல்யாஸுப்ரஜா ராம பூர்வா ஸந்த்யா ப்ரவர்த்ததே।'

என்று கூறி எழுப்பினர். நம் கருணைக்கடல் ஆண்டாளோ, 'அவனை முதலில் எழுப்பி என்ன பயன்? அவன் என்றும் விழித்திருக்கிருன். அயர் வற்றவன்; சோர்வற்றவன்; சூதற்றவன். அவனைக் காணவேண்டியவர்கள் நாமல்லவா? உணவிருந்தும் புசியாமலிருக்கிர்களே? பாலிருந்தும் பருகாத பாதகர்க ளாகின்றுர்களே!' என்று நெஞ்சம் உருகித் தானே எழுப்புகிருள். கடைசியில்தான் கள்ளச் சிறுவனை, கார்முகிலை, வங்கக் கடல் வண்ணனை எழுப்புகிருள். ஆறும் பாட்டில், "சிந்தனை சிதறிய சிறு மகளே! பறவைகள் ஒலிக்கின்றன, வடிவழகன் சங்கம் முழங்குகிறது. கருத்திற்கிசைந்த பாலனை உள்ளத்தே கொண்ட முனிவர்களும் யோகிகளும் 'ஹரிః ஹரிః ஹரிః' என்றும் கூறும் பேரரவம் தேன் நதியில் மாங்கனி மிதப்பதுபோல் இசை வெள்ளத்தில் கருத்துக் கனி மிதந்து செவியில் பாய்கிறதே. இன்னும் உறங்குதியோ?" என்று ஒருத்தியைக் கூப்பிடுகிருள். இங்குக் காலை வேளைச் சின்னங்கள் சிதருமல் கூறப்பட்டிருக்கின்றன. பொதுவாக மனிதர்கள் பிறரை எழுப்பும்பொழுது பத்து விதமான முறையைக் கையாள்வதை நாம் கண்டிருக்கிறேம். அதில் முதல் முறையால் (By intimation of the dawn) 'பொழுது விடிந்து விட்டது; எழு' என்று கூறி எழுப்புகிருள்.

'நீ உறங்கலாம். அவன் உன்னை விடான். மாயைப் பூதனை உன்னை மயக்கி யிருக்கிருள். இருந்தாலென்ன? அன்று பேய் முலை நஞ்சுண்ட நெஞ்சன் உன்னை விடுவானு?' என்கிருள். 'த்ருவன் கன்னத்தே தடவி அவனுக்கு ஞான ஒளிகாட்டிய அச்சங்கநாதம் உன் காதில் விழுகிறது' என்றும் கூறுகிருள். இப்பாட்டில் குழந்தை கண்ணனுக்குப் 'பேய் முலை நஞ்சுண்டவன், கள்ளச் சகடம் கலக்கழியக் கால் ஓச்சியவன், வெள்ளத் தரவில் துயிலமர்ந்த வித்து' என்று மூன்று விசேஷணங்கள் அருமையாகச் சேர்த்து இணைத்து இழைத்துப் போந்தாள் இன்னமுதம் ஊட்டும் இளமங்கை கோதை.

ஏழாம் பாட்டில்:-(By pointing out belatedness) 'பொழுது விடிந்தது; நாழியாகிவிட்டது' என்ற முறையைக் கையாளுகிருள். 'பேதையே! கீசு கீசு என்று வலியன் குரலிடுகின்றதே! கழுத்திலும் கையிலும் பூட்டிய நகைகளின் சத்தம் முழங்க ஆய்ச்சியர் கடையும் தயிர்ச் சத்தம் கேட்கின்றதே! உறங்காதே எழுந்திரு; மணிக்கதவம் திற' என்கிருள். இவ்விடத்தில் 'பேதை' என்று பெண்ணைக் கூப்பிடுகிருள். பெண்களுக்கு அது ஒரு இயற்கைக் குணமே. அதை ஏசுவது எங்ஙனமோ? இல்லை. அவள் உள்ளத்தே பெண்ணை எழுப்புவதாக நினைவில்லை யல்லவா? மாநிலம் வாழும் மாந்தர் அனைவரையும் எழுப்புகிருள் அன்றே? ஆகவே ஆண்களையும் பெண்களையும் பொதுவாகப் பேசுமிடத்து இந்த அடைமொழி ஏசலாகத்தானே இருக்கக்கூடும்.

எட்டாம் பாட்டு :-[By call] 'கூப்பிடுவது' என்ற முறையைக் கையாளுகிருள். மேய விடப்பட்ட எருமைகள் வெளியே சென்றுவிட்டன. உன்னைத் தவிர ஏனைய இடைப்பெண்கள் வெளியே சென்று விட்டனர். அவர்களைப் போகவொட்டாமல் தடுத்து உன்னையும் கூப்பிட வந்து நிற்கிறோம். பாவாய்! எழுந்திரு. கேசியைக் கொன்ற கேசவன் நம்மேல் பரிதாபப்பட்டுக் காத்திடுவன் ; எழுந்திரு' என்கிருள். [தொடரும்]

ஸ்ரீ:

பஞ்சாங்க ஸங்க்ரஹம்

ஸர்வதாரி ஸூ சித்திரை (மேஷ) மீ

13-3-48	1உ	செவ்வாய்க்கிழமை ...	சித்திரை விஷு: முதல் நாள் மேஷரவி 55-50. இன்று தர்ப்பணம். வர்ஷப்பிறப்புப் பண்டிகை. சூந்ய திதி
14-4-48	2உ	புதன்கிழமை ...	சூந்ய திதி
15-4-48	3உ	வியாழக்கிழமை ...	ஷஷ்டி—ஸப்தமி திதி த்வயம்
16-4-48	4உ	வெள்ளிக்கிழமை ...	மேஷ சுக்ல அஷ்டமி திதி
17-4-48	5உ	சனிக்கிழமை ...	மேஷ சுக்ல நவமி திதி:
18-4-48	6உ	ஞாயிற்றுக்கிழமை ...	ஸ்ரீராம நவமீ
19-4-48	7உ	திங்கட்கிழமை ...	ஏகாதசி திதி
20-4-48	8உ	செவ்வாய்க்கிழமை...	ஸ்ரீ வைஷ்ணவ ஏகாதசி (வ்ரதம்)
23-4-48	11உ	வெள்ளிக்கிழமை ...	சித்ரா பௌர்ணமி; ஸ்ரீ மதுரகவி யாழ்வார் திருநக்ஷத்ரம்: சந்த்ர க்ரஹணம் 1
4-5-48	22உ	செவ்வாய்க்கிழமை ...	மேஷ க்ருஷ்ண ஏகாதசி திதி
5-5-48	23உ	புதன்கிழமை ...	ஏகாதசி (வ்ரதம்)
8-5-48	26உ	சனிக்கிழமை ...	ஸர்வ அமாவாஸ்யை
9-5-48	27உ	ஞாயிற்றுக்கிழமை ...	ஸூர்ய க்ரஹணம் 2
11-5-48	29உ	செவ்வாய்க்கிழமை...	அக்ஷய த்ருதீயை
12-5-48	30உ	புதன்கிழமை	மேஷ சுக்ல சதுர்த்தி திதி; ஸ்ரீ எம்பெருமானர் திருநக்ஷத்ரம்
13-5-48	31உ	வியாழக்கிழமை	மேஷ சுக்ல பஞ்சமி திதி: வ்ருஷபரவி 51-22, [மறுநாள் தர்ப்பணம்.]

1. சித்திரைமீ 11உ (23—4—48) வெள்ளிக்கிழமை ஸோமோபராக புண்ய காலம். ஸ்பர்ஸம் மாலை 6-48 மணி; மத்ய காலம்: 7-3 மணி; மோக்ஷகாலம் 7.20 மணி; ஆத்யந்தம் 32 நிமிஷம். பூர்ணிமா ச்ரார்த்தம் மறுதினம்.

2. சித்திரைமீ 27உ (9—5—48) ஞாயிற்றுக்கிழமை ஸூர்யோபராக புண்ய காலம். கரஸ்தோதயம். ஸ்பர்ஸம் உதயத்திற்குப் பூர்வமே மணி 4-50. மோக்ஷ காலம் 6-42; ஆத்யந்த காலம் மணி 1, நிமிஷம் 52. ஸூர்யோதயம் மணி 5-57.

ஸ்ரீ:

ஸ்ரீமதே ஸ்ரீலக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

சந்த்ரகலா மாலை

[ஸ்ரீ. உப. S.T. ஸ்ரீநிவாஸாசாரியர், M.A., L.T., வித்வான், திருவையாறு.]

தேராரும் திருவீதி யுடைத்தாய், திருமாலைச் செல்வமாய் உடைய சீரியர் பலர்க்கு வாழ்விடமான ஸ்ரீ வில்லிபுத்தூரில் ஒரு பட்டர் வாழ்ந்துவந்தார். அவர், சீர்மல்கு மாய்ப்பாடிச் செல்வச் சிறுமியான ஸ்ரீ கோதைப் பெருமாட்டியை மனோ வாக் காயங்களால் அர்ச்சனை புரிந்து வந்தார். நன்ருய்க் கற்றுணர்ந்தவர்; சிறந்த சொல்வன்மை யுடையவர்; தம் தொழிலைத் தொழிலாகக் கருதாமல் தம் உஜ்ஜீவநமாகக் கருதுபவர். தாம் பூஜிக்கும் திருமேனியை ஒரு விக்ரஹமாக மதியாமல், சதையும் ரத்தமும் என்பும் இதயமுங் கொண்ட ஓர் உயிர் வடிவமென்றும் அருள் வடிவ மென்றும் மதித்த மஹான். ஸ்ரீ கோதையார் அவருடைய உடல்; அவருடைய பொருள்; அவருடைய ஆவி.

பட்டர் நாற்பது நாற்பத்தைந்து வயது அடைந்ததும், கொடிய நோயான குட்டத்தினல் வாதை யுற்ருர். ஸ்ரீ கோதையாரை அவர் தீண்டித் தொண்டு புரியலாகாதென்று அவர்தம் இனத்தவர் செப்பினர். ஸ்ரீ கோதையாரைத் தீண்டி அவரது பாதாரவிந்தங்களில் பூசனை புரியப் பட்டர்தம் மனமும் மறுத்தது. பட்டர் புன்சிரிப்புடன் 'தாயே! உன்னை விலகியிருந்து கண்டாலாகாதோ? கடல் மலை மத்தகஜம் வானம் இவற்றை விலகி நின்று காணக் காண இன்பம் மேலிடும்' என்பர். மற்ருெரு ஸமயம், 'இவ்வளவு சேதநர்க் கிடையில் இந்த நோயை எனக்குக் கொடுத்தனையே தாயே! அது உன்னுடைய மாபெருங் கருணை யல்லவா? நீ இன்பமே நல்கினும் துன்பமே நல்கினும் உன்னிரு சேவடிக்கண் அன்பே செலுத்துவ தல்லவோ வைஷ்ணவனுக் கழகு? என் தாயே! அன்புடன் அளித்த நோய் என் அன்புக்கு ஓர் உரைகல் அல்லவா? நின் அருளின் பயனுன இந்நோயை மனப்பூர்வமாக ஏற்கின்றேன். கொடிய நோய்கூட எனக்கு நீ தந்த அணிகலனுகும்' என்பார்.

நாட்கள் சென்றன. பட்டரின் உடலின் உறுப்புகள் புண்பட்டு க்ருமி யுற்றுக் குறைய ஆரம்பித்தன. அவர் புருவங்கள் காது நுனிகள் மூக்குமுனை கால்விரல்கள் இவைகள் மெதுவாகக் குறைந்து மறைய ஆரம்பித்தன. அவர் வீற்றிருந்த இடங்களில் புழுக்கள் நெளிந்து தாங்கொணுத் துர்நாற்ற மெடுத்தது. அவர் முகத்தில் சிறு துயரமும் தோன்றவில்லை. கண்களின் தெய்விக ஒளி குன்றவில்லை. தடித்துப் புண்ணுற்ற அவரது உதடுகள், ஸ்ரீ கோதையாரின் தோத்திர மொழிகளைப் பிதற்றுவதால் அசைவது நீங்கவில்லை. பட்டர் வீட்டிலிருந்து துரத்தப்பட்டார். வீதிகளிலிருந்து நீக்கப்பட்டார். அவரைக்

கண்ட யாவரும் அருவருப்பாலும் அச்சத்தாலும் அகன்றனர். ஆனால் அவருக்கோ, உண்ணுஞ் சோறும் பருகு நீரும் ஆண்டாள் ஆகையால், எப்படி யாவது அப்பெருமாட்டியைக் கண்ணுற்றுக் கண்ணுங் கண்ணீருமாய்த் துதித்து விரல்களற்ற தன் இருகரங்களையும் ஒன்று சேர்த்து நின்று களித்து அகல்வார்.

நகர்ப் புறத்தே தெருக்கோடியில் அழுக்கும் குப்பைகளும் மண்டிய ஓரிடத்தே நிர்ப்பயமாய் உட்கார்ந்து திருப்பாவையை அநுஸந்திப்பார். ஒரு மட்கலத்தில் சில பெண்மணிகள் எப்பொழுதாவது கொஞ்சம் அன்னம் இட்டு வைத்து நீரும் ஊற்றிச் செல்வார்கள். இதுதான் அவரது ஆஹாரம். யாரே னும் ஒரு பெண் நடந்து சென்றால், 'நடப்பதும் ஆண்டாள், தம் முன் கிடப்ப தும் ஆண்டாள், நம் முன் இருப்பதும் ஆண்டாள்' என்று ஆநந்தமாய்ச் சொல்லிக்கொள்வார்.

நோயின் கொடுமை அதிகரித்தது. புழுக்களும் துர்நாற்றமும் அதிகரித் தன. ஆயினும் அவர் உடலை அரித்துத் தின்ற புழுக்கள் அவரது அழகிய ஹ்ருதயத்தை என் செய்ய முடிந்தது? ஆயினும் அவர் நடுங்கினார். 'என் மனத் துக் கினிய ஆண்டாளே! உன்னை என் வாழ்வில் நாற்பது வருஷம் பூஜிக்கப் பெற்றதே பாக்யம். இப்பொழுது நாற்றமும் சீழும் நிறைந்த என் உடலின் நரகம் போன்ற என் உள்ளத்தால் உன்னை நினைக்கலாமா? நினைப்பதும் ஆத்ம நாசகமான பாவம்' என்று தலையில் அடித்துக்கொள்வார்.

தூரத்தில் தீவட்டி வெளிச்சத்தில் மேள தாளங்களுடன் புற உலாப் போந்தருளும் ஆண்டாளைச். சில ஸமயம் கண்ணுற்றுக் கண்ணீருடன் 'ஆண் டாள்! என் அருங்கலமே! உன் அன்பாம் பெருமழையால் இவ்வுலகை நனைத்துப் பாலைவனங்களை நந்தவனமாக்கினையே! கண்டதெல்லாங் கண்ண னென்று பெரும் பாக்யங் கொண்டனையே! உடல் பொருள் ஆவி கண்ண னென்று காட்டி அக்கண்ணனை உலகுய்யுமாறு வசங்கொண்டனையே! தாயே! நீ வாழி; நின் அன்பு வாழி; நின் அருள் வாழி!' என்று விம்மி விம்மி அழுவார். பயங்கரமான க்ருஷ்ண பக்ஷத்து இரவு. வானெல்லாம் இருண்டு மருள் தந்தது. குளிர் காற்று வீசியது. குப்பைப் புறத்தில் இரு கரங்களையும் குவித்து வீற் றிருந்தார் பட்டர். அவர் கண்களில் சுடச்சுட நீர் ததும்பிப் புண்ணார்ந்த. அவர் கன்னங்களில் பெருகியது. 'அம்மா! ஆண்டாள்! உன்னைக் காணாதிருப்ப தென்றால் முடியுங் காரியமா? அஸ்தமித்து ஒரு முஹூர்த்தங்கூட இராது போலிருக்கிறது. உன் கோயிலையேனும் உன் தோரண வாயிலையேனும் கண் ணால் காணாவிடில் தரியேன்' என்றார். கால்கள் நல்ல நிலையி லில்லாததால் தட்டி முட்டித் தடவி நடக்க ஆரம்பித்தார். சண்டை யிட்டுக் குரைத்துத் தன் மேல் விழுந்த ஒரு கருநாயைத் தன் விரலற்ற கையால் தடவினார். உண்ட மிச்சத் தைக் கொஞ்சம் நாய்க்குக் கொடுக்கும் வழக்கத்தால் இவர் கைபட்ட நாய் குரைப்பை அடக்கி வாலை ஆட்டி மரியாதையுடன் மௌனமாய் நின்றது.

'ஸ்ரீவில்லிபுத்தூரில் நோயற்ற வாழ்வு வாழும் பாக்யங்கொண்ட என் அரிய ஸௌஹ்ருத்தே! இந்த உடலம் தளர்ந்து உன் ஆவி ஒடுங்கும்போது உனக்கு ஆண்டாள் பெருவாழ்வு தரப்போவதை மறந்தனையோ? என் கோப முறுகிறாய்? ஐயமும் பிச்சையும் ஆந்தனையுங் கைகாட்டி உய்யுமா றெண்ணி உகந்தேலோ ரெம்பாவாய்' என்றார். நாய், ஸந்தோஷப்பட்டதுபோல் வாய் திறந்து மெதுவாகச் சப்தித்து வாலாட்டி அப்பாற் சென்றது. 'இந்தக் காற்றிலே அன்பு—கடிநகரில் அன்பு—என் உள்ளத்து ஊற்றிலே அன்பு-என் ஊனிலும் அன்பு' என்று சொல்லவந்தவர், 'சீ!சீ! என் உடலில் அன்பு! சீழும் இரத்தமும் ஓடும் என் ஊனில் அன்பு! பைசாசமே! துராசாரா! நீ அன்பின் வடிவை நினைக்கவும் ஆமா?' என்று பற்களைக் கடித்துக்கொண்டார்.

சாப்பிட்டு இரண்டு நாளாயிற்று. களைப்பையும் பொருள் செய்யாது வீதிகளைக் கடந்து சென்றார். கோபுர வாயிலை அணுகினார். மக்கள் நடமாடாத ஓர் பகுதியில் கோயில் மண்டபச் சுவரில் தலை சாய்த்தார். கண்கள் சுழன்றன. நா வறண்டது. தலை கிறுகிறுப்புற்றது. தாஹம் அவரைப் பெரிதும் பாதித்தது. ஆண்டாள் தாஹம். 'கார்மேனிச் செங்கண் கதிர் மதியமே! என் மார்கழித் திங்கள் மதியே! பெரியாழ்வார் பெற்ற பெண்ணரசியே!' என்று சொல்லிக் கீழே விழுந்தார். ஈரமும் அழுக்கும் மண்டிய இடம். உலகெலாம் இருள் கவிந்து நின்றது. ஆகாயத்தின் கரிய பரப்பில் திறனற்ற சில நக்ஷத்ரங்கள் மங்கி நின்றன. கனவோ! நனவோ! இனிய நித்ய ஸூரிகளின் கானம் போன்ற ஓர் அத்புத கானம் கேட்டது. 'கூடாரை வெல்லுஞ் சீர்க் கோவிந்தா! உந்தன்னைப் பாடிப் பறை கொண்டு யாம் பெறு சம்மானம்'. என்ன இனிய ராகம்! என்ன மனத்தைக் கொள்ளை கொள்ளும் குரல்! திடுக்கிட்டு எழுந்தார் பட்டர். நீலமான ஓர் ஒளி பரவி நின்றது. புண்ணார்ந்த தன் கைகளால் தன் கண்களைக் கசக்குவதுபோல் செய்து விழித்துப் பார்த்தார். ஐயோ! என்ன பயங்கரமான நோய்! என்ன தெய்விகமான நோக்கு! ஒரு பெண்மணி தனக்கு முன்னே நிற்பதைக் கண்டார். பரப்பரப்புடன் தன் உடலைச் சுவருடன் ஒடுக்கி, 'அம்மா! நீ யாரோ ஸேவார்த்திபோலும்! ஸ்ரீ வில்லிபுத்தூருக்குப் புதிது போலும்! நாற்றப் பேயாகிய நான் நடமாடுமிடத்தில் உன் அடி சில வினாடிகளும் பதிந்திருக்கவேண்டாம் போ; போ; உன்னைக் கெஞ்சுகிறேன். என்னைப் பார்; என் கொடுமையைப் பார்' என்று கெஞ்சிய குரலில் சொன்னார்.

புழுக்கள் நிறைந்து ஆரவாரிக்கும் புண்கள். புண்கள் நிறைந்த உறுப்புக்கள். இரத்தம் தெரியத் தேய்ந்த உறுப்புகள் வாய்ந்த உடல். இவ்வுடலுக்கெதிரில் மின்னலோ நக்ஷத்ர மாலையோ என நினைக்கப்பெறும் ஒரு பெண் உருவம். பத்தரை மாற்றுத் தங்கத்தை உருக்கியதெனப் பொலிவுற்ற திருமேனி. வஞ்சிக் கொடிபோற்ற துவட்சி. அருளும் அழகும் திரண்ட வடிவம். கூரிய மதர்த்த கருணை வாய்ந்தகன்ற கண்ணிணை. விண் மீன்களைக் கோத்துப் பூண்டதென விளங்கும் திவ்யாபரணமாலை. கொங்கும் அரவும் வல்லியும் வென்ற நுண்

ணேரிடை. பாலும் ரோஜாவும் ஒன்ருக்கிக் குழைத்து இழைத்த தென்ன பாவியிட அழகிய திருவடிகள். இப்பெண்மணியைக் கண்டு பட்டர் 'அம்மையே! இப்பிருந்து அகலுதி' எனத் தன் கண்களை மூடிக்கொண் டார். சுருதியுடன் இழைந்த ஓர் ஆயிரம் வீணையின் இனிமையைக் கொண்ட அத்புத ஒலியுடன் அம்மங்கை நல்லாள் பேச ஆரம்பித்தாள்.

'மஹநீயரே!' என்ன அத்புதமான குரல்! என்ன ஆதரவான குரல்! உலகின் துக்கங்களெல்லாம் ஓட்டுங் குரல். வருத்தமும் தீர்ந்து மகிழ்ந்து நிற்க வைக்குங் குரல். பட்டர் செவியில் அமுததாரைபோல் விழுந்த குரல். "மஹநீயரே"! குளிர்ந்த காற்று ஓடுகிறது. மரங்களும் மலைகளும் அயர்ந்து நின்றன. இவ்வுலகமே இந்த உத்தமியின் சொல்லை ஓர்த்து நின்றதுபோலும். "மஹநீயரே"! கோவிலுக்கு வரும்பொழுது சிலர் ஆண்டாள் இங்கே இருப்பதாகச் சொன்னார்கள். இங்கேயே அவளைக் கண்டுகொள்ளலா மென்று........." பட்டர் திடுக்கிட்டார். இந்தக் குப்பையிலா! அழுக்கிலா! இந்த நரகப் பிசாசு இருக்கு மிடத்திலா! அம்மணி! நீ ஏமாற்றப் பட்டாய். அதோ! முத்தும் பவளமும் மிடைந்து பொலியும் தோரண வாயிலைத் தாண்டி, மாதவிப் பந்தரையும் மரகத மண்டபங்களையும் கடந்து செல்வாயாகில் என் அன்னையை உள்ளே காணலாம். அம்மணி! விரைந்து செல். உன் பாக்யங்களையும் மங்கச்செய்யும் மாபெரும் பாதகனான யான் கிடக்கும் இந்நிலமும், மாசற்ற நின் அடித்தாமரைகளால் மிதிக்கப்பெருதவை. செல்லுதி, ஏகுதி' என்ருர். களைப்பு மேலிட்டு அயர்ந்தார்; மூர்ச்சையானர். வைர வைடூர்ய வளையல்களின் ஒலி கண்ணைப் பறிக்க, அச்சீரார் வளைகளின் ஒலி காதில் விழ, தேவரார் தெள்ளமுத மன்ன இன்னடிசில் வாயில் வந்து விழுவதை யுணர்ந்த பட்டர் தம்மையே நம்ப முடியாதவரானர். 'அம்மையே! ஈதென்ன அநீதி? அதோ அப்படி வெறுநிலத்தில் ஒரு கவளத்தை வீசி யெறிந் திருப்பாயாகில் உண்டிருப்பேனே. என் தூராக்குழியைத் தூர்க்கத் தேவாங் கனை போன்ற நீ, நின் செந்தாமரைக் கரத்தாலே செயல் புரிய வேண்டுமோ? அடாது; அடாது. அன்னய்! என்னைப் பகலில் பார்த்தால், அம்மம்ம! உன் பூவன்ன மேனி நடுங்கும். விலைதி தாயே! அகலுதி' என்ருர். மின்னு கின்ற ஓர் பொன் பாண்டத்திலிருந்து அப்பெண் மற்ருெரு கவளத்தை எடுக்கப் பட்டர் துடிதுடித்துச் சுவருடன் ஒடுங்கினர். 'அம்மணி! நிலவும் இருளும் போல், பிசாசமும் திவ்யஸுரியும்போல், தர்மமும் பாபமும் போலிருக் கிறது நமது சேர்த்தி' என்று பைத்யங் கொண்டவர்போல் சிரித்தார். அப் பெண்மணி தன்னை ஒரு கையால் தலையில் தீண்டியதை உணர்ந்தார். கொதித்த ஓர் எரிமலையில், ஹிமய மலையிலிருந்து பெருகும் ஸுரவாஹிநி பாய்ந்ததுபோல் அவர் உடலெல்லாம் ஜிலீர் என்ற உணர்ச்சி பிறந்தது. உடல் முழுமையும் சொல்லொணு மாறுதல் உண்டாயிற்று. ஓர் ஜீவநதி பெருகி விரைந்து களித்துக் கொந்தளித்து உடல் முழுவதும் ஓடுவதுபோல் இருந்தது. கொதித்த கண்க ளின் பரிதாபகரயான இரத்தச் சிவப்பு மாறியது. அவ்விடத்தில் தெய்வீக

மான மலர்களின் மணம் மேலிட்டது. ஆகாய வீதியில் பலர் ஒன்று சேர்ந்து பாடும் இனிய ஓசை கேட்டது.

"வங்கக் கடல்கடைந்த மாதவனைக் கேசவனைத்
திங்கள் திருமுகத்துச் சேயிழையார் சென்றிறைஞ்சி
.... எம்பாவாய்!"

கேட்டார் பட்டர். மதிமயங்கி இன்புற்றுக் கைகுவித்தார். 'என்னுடன் ஆண்டாளைக் காண வாரீர்.' இவ்வின்பக் குரலைக் கேட்டதும் பட்டர் 'அன்னாய்! நீ என்னை அறியாய் போலும்; ஐயோ!' என்று கதறினார். அவர் அழுவதைக் கண்டு தாளாத அப்பெண்மணி தன் பொற்கலிங்க வாடையின் முந்தானையால் தன் கண்களை ஒத்திக்கொண்டாள். 'மஹநீயரே! எழுந்திரும்' என்றாள். பட்டர் எழுந்திருந்தார். அவர் கண்கள் ஆச்சரியத்தால் மிளிர்ந்தன. பரவிய நீல ஒளியால் தன் உடலில் புண்களெல்லாம் காணாததைக் கண்டார். கையை நீட்டினார். மடக்கினார். விரல்களை நோக்கினார். உடலெல்லாம் நல்ல சுத்த சிவந்த உயிர் தருகின்ற ரத்த வெள்ளம் ஒரு ஜீவநதிபோல் ஸகல நாடிகளிலும் பெருகிக் கொந்தளித்து நின்றதை உணர்ந்தார். ஏதோ கேட்க வாய்திறந்தவர், அப்பெண் வேகமாக முன் செல்வதைக் கண்டார். அவளைச் சூழ்ந்த நீல ஒளியின் மிகுதியால் அவர் அவளைக் காணத் தொடர்ந்தார். 'அம்மணீ! உன் முகத்தைக் காட்டு; உன் அருள் நோக்கை வீசு' என்று கெஞ்சிக்கொண்டே ஓடினார். பெண் மறைந்தாள். மறுநாள் ஸ்ரீ ஆண்டாளது மஹாமண்டபத்தில் குஷ்ட நோயுற்ற பட்டர் நோயெல்லாந் தீர்ந்து தங்கம் போன்ற திருமேனியுடன் காணப்பட்டார். நகரம் ஆச்சர்யப்பட்டது. என்ன அன்பின் வன்மை! அன்பின் வெற்றி! பட்டர் மறுபடியும் ஆண்டாளின் சரணாரவிந்தங்களுக்குப் பூவும் புனலும் இடும் பாக்யம் பெற்றார். 'என் அம்மணீ! என்னைக் குப்பைப் புறத்தே நாய்களை விலக்கித் தேடியருளும் பொருட்டு வந்தனையோ? என் மாணிக்கமே! என் ஆருயிரே!' என்பார். இவர் ஆண்டாளுக்கெதிரில் நின்றாற் போதாதோ? இவர் உள்ளம் இருக்க ஆண்டாள் கோரும் மலர் வேறுண்டோ? இவர் கண்ணீரன்றி ஆண்டாள் மலரடியை ஆட்டப் புனல் வேறு உண்டோ? இவர் நெஞ்சன்றி அப்பெருமாட்டிக்குப் பூசும் சாந்தமோ வான் பட்டாடையோ வேறுண்டோ? ஆயினும் தன் அழகிய அத்புத அநுபவத்தையும் ஆண்டாளின் மாறாத அன்பையும் உலகறியுமாறு அப்பெருமாட்டியைப்பற்றிப் பதினாறு பாசுரங்கள் கொண்ட சந்த்ரகலா மாலை என்ற நூலினால் அழியாப் புகழ் எய்துமாறு செய்தார். இந்நூலின் பாசுரத்தில், தான் உடலின் கொடிய நோய் நீங்கி நல்ல ரத்தம் எங்கும் பரவிப் புத்துயிர் பெற்றதையும், இப்பெருமாட்டியை நம்பியவர்,

'திருத்தக்க செல்வமும் சேவகமும் யாம்பாடி
வருத்தமும் நீங்கி மகிழ்ந்து'
'திங்கள் திருமுகத்துச் செல்வத் திருமாலால்
எங்கும் திருவருள்பெற் றின்புறுவர்'

என்றும் உலகுக்கு மழுவேந்திக் காட்டுவதுபோல் விளக்குகிறார். தமக்கு ஆண்டாள் செய்தருளிய திருவருளைப் பின்வரும் பாடலிற் சிறப்பித் தின்புறுகிறார்:—

புழுநெளிந் துண்டுவளர் தசைநரம் பென்புதோல்
புண்ணளிக் கும்பி நாற்றப்
புரைபாழ்ங் குழிச்சல மலச்சேற் றழுந்திப்
புதைந்து நைந்தேனை யெவரும்

தொழுமினிய பங்கயத் தாளா லெடுத்துமெய்ச்
சோதியமு தாலய மலர்த்
துணைவிழியி லானந்த வருள்மாரி பெய்துடல்
தோயக்கு ளிப்பாட்டி னாய்

தழுவுகுங் குமமுலைக் கெழுதுவார் சிந்துரஞ்
சாத்துவார்பூச் செருகு வார்
தண்டமிழ்ப் பாடுவார் தண்டனிட் டாடுவார்
சந்தியிற் பந்தடிப் பார்

செழுநில வுகந் திளைஞர் மயலுற முயங்குவார்
தெருவினிற் குரவை பிணைவார்
தேர்த்திரு விழாத்தினம் போற்றினமும் விளையாடு
திருமல்லி வளநாடியே.

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

உபாதாநலக்ஷண தத்வம்

[மதுராந்தகம் ஸ்ரீ. உப. தி. ஈ. வீரராகவாசார்ய ஸ்வாமி, ஸம்ஸ்க்ருத காலேஜ், திருவையாறு.]

முண்டகோபநிஷத் பாஷ்யத்திலுள்ள உபாதாந லக்ஷணத்தைப்பற்றி இரண்டு ஸந்தேஹங்கள் ஸ்ரீ ஸம்பாதக ஸ்வாமியால் மறுபடியும் உத்தாபநம் செய்யப்பெற்று, சென்ற மாதத்து ஸஞ்சிகையில் அவை ப்ரசுரமாகியிருக்கின்றன.

“ பூர்வாவஸ்தாயாம் யத், தத் உபாதாநம் ।
உத்தராவஸ்தாயாம் யத், தத் உபாதேயம் ॥ ”

என்பது மாத்ரம் லக்ஷணமாகில், பூர்வாவஸ்தையில் விசேஷணமாயிருக்கும் அசேதநாம்ஶமும், உத்தராவஸ்தையி லுள்ள விசேஷ்யாம்ஶ மாகிற சேதந ப்ரஹ்மத்திற்கு உபாதாநமாக வேண்டாவோ? என்பது முதல் ஸம்ஶயம். உபநிஷத் பாஷ்யத்திலேயே இவ்வாக்ஷேபமும் அதற்குப் பரிஹாரமும் உள்ளன. அப்பரிஹாரமாவது:

“ ஸாவஸ்தவஸ்துந: பூர்வாவஸ்தாயாம் யத்
காரணம் தத் உபாதாநமிதி த்ரவ்யஸ்யைவ ஸம்பவாத் ”

என்பதே. உபாதாந லக்ஷணத்தில் காரணம் என்பதையும் சேர்த்துக்கொண்டால் இவ்வாக்ஷேபத்திற்குப் பரிஹார மேற்பட்டுவிடுகின்றது. ‘ப்ரஹ்மத்தைப் பற்றி அசேதநாம்ஶமும் காரணம் என்பதாகக் காட்டும் ப்ரமாண மொன்று மில்லை; அசேதநாம்ஶத்தைப்பற்றி ப்ரஹ்மமானது காரண மென்பதற்குப் பல ப்ரமாணங்கள் உண்டு. ஸர்வ கார்ய காரணம் ப்ரஹ்மம் என்பதாக ப்ரமாணங்கள் பல சொல்லுகின்றன’ இத்யாதியாகப் பாஷ்யகாரரே ஸமாதாந மருளியிருக்கிறார்.

உபநிஷத் பாஷ்யகாரர் தாமே இந்த ஸம்ஶயத்தையும் அதற்குப் பரிஹாரத்தையும் அருளியிருப்பதை நம் ஸம்பாதக ஸ்வாமி மார்கழி மாதத்து ஸஞ்சிகையிலே குறிப்பிட்டிருக்கிறார். ஆனால் ‘தத்பிந்நம்’ என்றொரு தளத்தை நிவேசித்துப் பரிஹாரத்தைப் பாஷ்யகாரர் ஸாதிப்பதாக நினைத்து பிந்ந த்ரவ்யங்களுக்கு லக்ஷண ஸமந்வயம் செய்யப்புகுகிறவர், தமக்கு அத்யந்தம் பாதகமான ‘தத்பிந்நம்’ என்னும் தளத்தை அவலம்பித்தது ஆச்சர்யமே. இத்யாதியாகக் காட்டியுள்ளார் ஸ்வாமி. ‘ஸூக்தி ஸௌஹார்த்த விவேசநம்’ என்கிற வ்யாஸத்தில் இதற்கு ஸமாதாநம் எழுதியனுப்பியுள்ளேன். ‘தத்பிந்நம்’ என்பதாக உபாதாந லக்ஷணத்தில் சேர்த்துக்கொள்ளவேண்டி வருமே என்பதாகப் பூர்வபக்ஷியின் அபிப்ராயத்தைக் காட்டி அம்முகமாகப் பிந்நமான ‘ரபஞ்

சத்திற்கு ப்ரஹ்மம் உபாதாந மென்பது எப்படிப் பொருந்தும்?' என்று ஆக்ஷேபம் செய்துகொண்டு அந்த விஶேஷணம் (தத்ஸிந்நம்) வேண்டியதில்லை என்பதாகவே ஸித்தாந்தம் செய்தருளுகிறார் உபநிஷத் பாஷ்யகாரர். 'பரமாத்மாவைக்குறித்துப் பூர்வாவஸ்தாச்ரயமான அசேதநமும் காரண மாகுமே; அதற்காகத் 'தத்ஸிந்நம்' என்று உபாதாந லக்ஷணத்தில் சேர்க்கவேண்டுமே' என்பதாகப் பூர்வபக்ஷம்; 'தத்ஸிந்நம்' என்கிற தளம் வேண்டாம்; 'காரணம்' என்கிற தளம் சேர்த்துக்கொண்டால் இவ்வாக்ஷேப பரிஹார மேற்படுகிறது' என்பது பாஷ்யகாரர் ஸமாதாநம்.

காரணத்வம் சேர்ந்த லக்ஷணத்தின்படி ப்ரஹ்மத்தைப்பற்றி அசேதநம் காரணமாகவேண்டுமே என்கிற ஸம்ஶயத்திற்குப் பரிஹாரத்தைப் பாஷ்யகாரர் ஸுவிஶதமாக அருளியிருப்பதை நம் ஸம்பாதக ஸ்வாமி புநர் விமர்ஶநம் பண்ணியருளவேணும்.

இந்தக் காரணத்வ விஶேஷணத்தினாலேயே ஸம்பாதக ஸ்வாமியின் இரண்டாவது ஸம்ஶயத்திற்கும் பரிஹார மேற்பட்டுவிடுகிறது. அந்த ஸம்ஶயமாவது: (2) பூர்வாவஸ்தாயோகியான ம்ருத் பிண்டத்தை உத்தராவஸ்தாயோகியான நகநிக்ருந்தநத்திற்கு உபாதாந மென்று சொல்லக்கூடுமோ? என்பதாக. லக்ஷணத்திலுள்ள காரணத்வ விஶேஷணம் ம்ருத் பிண்டத்திற்கு இல்லை, ஆயஸ த்ரவ்யத்திற்கு ம்ருத் பிண்டமானது காரண மன்றே? ம்ருத் பிண்டமில்லாமலும் நகநிக்ருந்தந முண்டாகின்றது. ம்ருத்பிண்ட மிருக்கச்செய்தேயும் அதனால் அது உண்டாவதில்லை. ஆகவே இவற்றுக்கு அந்வய வ்யதிரேகம் கிடையாது. கார்யகாரண பாவமில்லை. இப்படி ஸம்பாதக ஸ்வாமியின் இரண்டு சோத்யங்களும் உபாதாந லக்ஷணத்திலுள்ள காரணத்வ விஶேஷணமொன்றாலேயே பரிஹாரம் பெறுகின்றன. 'தத்ஸிந்நம்' என்பதாக லக்ஷணத்தில் விஶேஷண மிட்டிருப்பதாகக்கொண்டு உபநிஷத் பாஷ்யகாரருக்கு ஸ்வஸித்தாந்த விரோதம் வந்துவிடுவதாக மார்கழி மீ ஸஞ்சிகையில் ஸ்வாமி குறிப்பிட்டதற்கும் யாதொரு ஆதாரமுமில்லை; அநுக்தோபாலம்பமே யாகும்.

(1) 'தத்ஸிந்நஸ்ய' விஶேஷண மூலகமாக மார்கழி மாத ஸஞ்சிகையிலுள்ள விரோத ஶங்கைக்கு அந்த விஶேஷணம் பாஷ்யகாரர் கொள்ளவில்லை யென்பது உத்தரம்.

(2) ப்ரஹ்மத்தைப்பற்றிப் பூர்வாவஸ்தாயோகியான அசேதநம் ப்ரஸங்கிக்குமே என்பதாகச் சென்ற ஸஞ்சிகையிலுள்ள முதல் ஶங்கைக்கு, லக்ஷணத்திலுள்ள காரணத்வ விசேஷணத்தினாலே உபநிஷத் பாஷ்யகாரரே பரிஹாரம் காட்டியிருக்கிறார் என்பது ஸமாதாநம்.

(3) நகநிக்ருந்தநத்திற்கு ம்ருத் பிண்டம் உபாதாநமாகுமே என்கிற ஆக்ஷேபத்திற்கு, அது அதற்குக் காரண மன்று; ஆகவே உபாதாந லக்ஷணத்திலுள்ள காரணத்வ விஶேஷண மிதற்கு இல்லை என்பது பதில்.

இப்படி உபாதாந லக்ஷணத்தின்பேரில் ஸ்வாமியின் ஆசங்கைகளுக்கு லக்ஷண வாக்யத்திலுள்ள காரணத்வ விஶேஷணமே பரிஹாரம் செய்கின்றது.

"ந ஹ்யத்ர ஹி நியோமேவோபாதாநோபாதேயபாவ ஸதி நியம:"

என்கிற ஸூக்தியைக்கொண்டு லக்ஷ்ய விஷயமாக ஸ்வாமி ஆபாதநம் செய்தருளிய பூர்வாசார்ய ஸூக்தி விரோதத்திற்கும் அவகாஶமில்லை யென்பதை 'ஸதாசார்ய ஸூக்தி ஸௌஹார்த்தம்' என்கிற வ்யாஸத்தின் மூலம் மார்கழி மாதத்து ஸஞ்சிகையில் விஜ்ஞாபநம் செய்துகொண்டிருக்கிறேன். ஆகவே முண்டகோபநிஷத் பாஷ்யத்திலுள்ள உபாதாநோபாதேயபாவ விசாரத்தில் லக்ஷ்ய நிர்கர்ஷமும் லக்ஷண நிர்ணயமும், ஸ்ரீபாஷ்யகார் ச்ருதப்ரகாசிகாசார்யர் ஸ்ரீ தேசிகன் ஆகிய பூர்வாசார்யர் ஸ்ரீஸூக்திகளையே ப்ரமாணமாகக் கொண்டவை என்பதை ஸம்பாதக ஸ்வாமி ஸந்நிதியிலும் மற்றுமுள்ள வாசக மஹான்களிடமும் விஜ்ஞாபநம் பண்ணிக்கொண்டேன். இவ்விஷயத்தில் ப்ராமாணிகாக்ரேஸரரான நம் ஸம்பாதக ஸ்வாமி தமது திருவுள்ளத்திலுள்ள நிஷ்கர்ஷத்தை வாசகர் உகக்குமாறு ப்ரசுரம் செய்தருளவேணுமாய் ஸவிநயம் அஞ்ஜலிபந்தத்துடன் ப்ரார்த்திக்கிறேன்.

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

மார்கழி நீராட்டம்.

[ஸ்ரீ உப. காளி வரதாசார்யர், வக்கீல், திருக்குடந்தை]

"ஏண்டா, சுந்து! என்னென்னவோ பழம் புராணங்களை யெல்லாம் புரட்டிக் கொண்டே யிருக்கிறாயே; இன்றை ப்ரச்னை ஒன்றில் ஈடுபடேன்" என்று சொல்லிக்கொண்டே உள்ளே வந்தான் கணபதி.

சுந்து :—இன்றை ப்ரச்னையில் எனக்கு அக்கரையில்லை; என்றை ப்ரச்னையுமாக இருந்தால் சொல்.

கண :—எங்குப் பார்த்தாலும் கம்பராமாயண ப்ரசாரமாக இருக்கிறதே, அது ஏன்? அதை விட உயர்ந்த இலக்கியங்களான மணிமேகலை சிலப்பதிகாரம் அகநானூறு புறநானூறு முதலிய பண்டை நூல்களைப் படிக்கும்படி எவ்வளவு சிபார்சு செய்தாலும், மக்கள் சிறிது காலத்துக்குமேல் அவற்றைச் சிந்தனையில் கொள்ளக் காணோமே. ஏன் இது?

சுந்து :—கேள்வி சரியான கேள்விதான். விடை அவ்வளவு அழகாக அமையாது. ஆனாலும் நான் உன்னை ஒரு கேள்வி கேட்கலாமா?

கண :—கேட்கலாம். என் கேள்விக்கு விடையாக உன் கேள்வி அமையுமானால்.

சுந்து:—இல்லை யில்லை; 'இன்றை ப்ரச்னை' என்று நீ ஆரம்பித்தவுடன் எனக்குத் தோன்றியது இந்த ஸந்தேஹம். வாக்வன்மையிலும் காம்பீர்யத்திலும் மாணிக்கவாசகரின் திருவாசகத்துக்கு ஈடு இணை வேறொன்று இல்லையல்லவா? அப்படி யிருக்கையில், அவரது திருவெம்பாவைக்கு அவ்வளவு ப்ரசாரத்தைக் காணோமே. எங்குக் கேட்பினும் திருப்பாவை முழக்கமாகவே இருக்கிறதே. ஏன்?

கண:—அது வைஷ்ணவர்களின் கட்டுப்பாடு; வேறொன்று மில்லை.

சுந்து:—அடே! அப்படி சொல்லாதே. விஷயம் இது. வைஷ்ணவர்கள் தங்கள் தெய்வத்தைத் தமித் தெய்வமாகக் கொண்டாடுகிறார்கள். திவ்யப்ரபந்தங்களுக்கு வேதங்களைவிட அதிக மதிப்புக் கொடுத்து, பெருமாள் புறப்பாட்டில் திவ்யப்ரபந்தங்களை ஓதிக்கொண்டு தொண்டர்கள் முன் செல்ல வேண்டுமென்றும், நித்யப்படியில் திவ்ய ப்ரபந்தங்கள் கோயிலில் அநுஸந்திக்கப்பட வேண்டுமென்றும் திட்டம் செய்து, அப்படி திவ்ய ப்ரபந்தம் ஸேவிப்பவர்க்கு மர்யாதையும் ப்ரயோஜநமும் செய்து வைத்திருக்கிறார்கள். அதனால் தான் தமிழ் ப்ரபந்தங்களுக்கே ஏற்றமும் ப்ரசாரமும் அதிகம் உண்டாயிருக்கின்றன.

கண:—எங்கள் கோயில்களில் மட்டும் ஏன் அப்படியில்லை? எங்கள் தெய்வமும் தமிழ்த் தெய்வந்தானே! அதில் ஸந்தேஹ மில்லையே. சிவன் 'த்ராவிடர்களின் தெய்வம்' என்று கூடச் சொல்வார்களே! அநுஷ்டானத்திலும் அவ்விதமே ஓதுவார்களைக் கொண்டு முறைப்படி தேவாரம் இன்னிசையுடன் பயிலப்பட்டு வருகிறதே. ஆனால் என்னதான் இருந்தாலும் உங்கள் திவ்ய ப்ரபந்தங்களுக்குள்ள ப்ரசாரம் எங்கள் தேவார திருவாசகங்களுக் கில்லையென்றுதான் சொல்லவேணும். இப்போது மணிவாசகர் இயற்றிய திருவெம்பாவையைப் படித்து ரஸிப்போம் வா.

சுந்து.— சரி; அதைப் படிப்பபதற்கு முந்தி நான்முகமாக ஒன்று கூறுகிறேன் கேள். வேதாந்த விழுப்பொருளை நாட்டுப் பழக்கங்களில் ஸர்வஸாதாரணமாகப் புகுத்திவிடுவது நமது பண்டை முறை. தத்வதர்ஶநம் வேறு, மதாசாரம் வேறு, என்று பாகுபாடு செய்வதில்லை. உண்ணப் புகுமுன் அந்நத்தைச் சுற்றி நீ சொல்லும் உண்மையைக் குருட்டுப் பழக்கம் என்பதா? விஜ்ஞானத்தின் எல்லை நிலம் என்பதா? 'ஸத்யமாகிற உன்னை ரிதத்தினால் சுற்றுகிறேன்; ரிதமாகிற உன்னை ஸத்யத்தினால் சுற்றுகிறேன்' என்றால், Matter Energy என்கிற தத்வங்களின் அப்பாலுள்ள ஆதியை அறிமுகப்படுத்தப் படுகிறோம் என்றுதான் நான் நினைத்துக்கொள்ளுகிறேன். இதை எதற்குச் சொல்லவந்தேனென்றால், இதேபோல் நம் நாட்டில், சிற்பமோ, ஓவியமோ, ஸங்கீதமோ, நடனமோ, காவ்யமோ, கற்பனையோ எதுவாயினும் அவைகளில் தெய்வ மணம் கமழவேண்டும். தெய்வ ஸந்நிதியில் அவை ஸம்பந்திக்கவேண்டும். கோயிலைச் சுற்றியே வளரவேண்டும் கலை. கலைகள் தனித்தோ

எதிர்த்தோ வெகுகாலம் நீடித்து நிற்கமாட்டா. அதனால்தான் அழகையும் வீரத்தையும் அவலத்தையும் ஆச்சர்யத்தையும் அள்ளிவிடும் கம்பன் கவிதைகளில், ஆழத்தினின்றும் காட்சி யளிக்கிறார் கருணைக் கடவுள். "உள்ளும் புறத்துமுளன், கூனும் சிறிய கோத்தாயும் கொடுமை யிழைப்பக் கோல்துறந்து, கானும் கடலும் கடந்து இமையோ ரிடுக்கண் காத்தான்" என்றும், வேதங்களாலும் அறியவொண்ணாத பரம்பொருள் தானே வானின்று இழிந்து வந்து வேடனோடும் குரங்கோடும் அரக்கரோடும் அநார்யனோடும், அண்ணன் தம்பி என்ற உறவு பூண்டு அந்யோந்யமாய்ப் பழகுவதாகச் சிறப்பித்துக் காட்டப்படுகிறது. கம்பனை 'ஆழ்வார்' என்று கொண்டாடுவதும் அதனாலேதான். கவித்திறனைக் கடவுள் திறத்து அர்ப்பணம் செய்துவிட்ட அண்ணல் அவர். அவருக்கு முன் அதே தொண்டில் இறங்கியவர்கள் ஸைவ ஸமயாசார்யர்களான நாயன்மார்களும் வைஷ்ணவ ஸமயாசார்யர்களான ஆழ்வார்களும் அன்னோர் 'உன்னுள் இருக்கும் கடவுளை உன் பழக்க வழக்கங்களிலேயே காணலாம்' என்று போதித்தனர்.

இன்னொரு விஷயம் கேள். சங்க காலத்துக்கு முன்பு முதற்கொண்டே தமிழ் நாட்டில் பெண்களுக்குள் ஒரு சிறந்த வழக்கம் இருந்துவந்தது. நல்ல நாயகரை அடையவும் நாடு செழிக்கவும் 'பாவை நோன்பு' என்று ஒன்று கன்னிப் பெண்களால் நோற்கப்பட்டுவந்தது. அப்பெண்கள் ஒன்று கூடிக் கொண்டு காத்யாயிநீ தேவியைக்குறித்து மார்கழி மாதத்தில் நோன்பு தொடங்கி, அதை அம்மாதத்துப் பௌர்ணமியோடோ அல்லது தை மாத ஆம்பத்திலோ ஆருத்ரா தர்ஸநத்தோடோ முறைப்படி செய்து முடிப்பார்கள். அது போலவே காமதேவனைக் குறித்தும் அவர்கள் நோற்பதுண்டு. கோழி கூவுவதற்கு முன்பே நீராடித் தங்கள் நோன்புச் சடங்குகளை வைகறையில் முடித்து விடுவார்களாம்.

இந்தப் பழக்கத்தைக் கண்ட மாணிக்கவாசகர், 'ஐயோ! இச் சிறுமியர் யாரையோ வீணே தொழுது வருகிறார்களே! ஆத்யந்த மில்லாத பரம்பொருளைத் தொழுதால் இம்மை மறுமைப் பயன்கள் கிடைக்குமே!' என்று இரக்கங்கொண்டு, இருபது பாட்டுக்களில் 'திருவெம்பாவை' என்னும் நூலை இயற்றினர். ஒருவரை யொருவர் வீணே ஏசிக் கொள்வதற்குப் பதிலாக, 'என் இறைவன் குணங்களைப் பாடியும் கேட்டும் போது போக்கலாகாது?' என்று, ஏசிக்கொள்ளும் முறையில் சிறுமிகளின் ஸம்பாஷணைகளைக் கவி சாதுர்யத்துடன் அமைத்தார். இறைவனையும் இறைவியையும் இயற்கையையும் வாயாரப் புகழ்ந்து வாழ்த்தினர். 'சித்த மழகியார் பாடாரோ நம் சிவனை' என்றும், 'அவலமே காலத்தைப் போக்காதே விண்ணுகோர் மருந்தை, வேத விழுப் பொருளை, கண்ணுக் கினியானைப் பாடிக் கசிந் துள்ளம் நெக்கு நின்று உருகப் பாடுவோம் வாரீர்!' என்று அழைக்கின்றார். 'ஊழி முதல்வனும், ஏழை பங்காளனும், கேழில் பரஞ்சோதியுமான அவன் பெருமையை உணர்ந்தும் ஏன் வீணே உறங்குகிறீர்கள்?' என்று தட்டி எழுப்பு

கிறர். 'அவன் தொண்டர்களே நமக்குத் தெய்வங்கள்; அவனையே பாடிக் குடைந்தாடுவோம் வாருங்கள்' என்று இழுத்துச் செல்கிறர் நீராட. 'நம் இல்லங்கள் தோறும் எழுந்தருளித் தன் செங்கமலப் பாதம் தந்தருளும் சேவகன், அங்கணரசு, விண்ணோ ரீசன், கண்ணார முதன் அவன்; அவனே நம் அடைக்கலம்; அவனுக்கே நாம் ஆட்செய்வோம்; அவன் பொன் மலர்களையே போற்றி நாம் யாவரும் மார்கழி நீராடுவோம் வாருங்கள்' என்று ஒரு புதுமையை அப்பழைய நீராட்டத்தில் புகுத்தி, புதுக் கொள்கையையும் புது நோக்கத்தையும் பழைய வழக்கத்துள்ளே காட்டினர்; கண்டார்; யாவரையும் காணச் செய்தார் மணிவாசகனர். இதுவே திருவெம்பாவை.

திருவெம்பாவைக்குப் பிறகே திருப்பாவை தோன்றியிருக்க வேண்டும். 'பரமனைக் கண்டு அஞ்சி அப்பால் நிற்க வேண்டியதில்லை; கருணைக் கடவுள் என்று அவனைப் போற்ற வேண்டியதில்லை; அவனை நம் தோழனென்றே நினைத்து அவனிடம் அளவளாவத் தொடங்கலாம்; அவனன்றி நாம் இல்லை; நாமின்றி அவன் இல்லை' என்ற கொள்கைகளை யுடையது திருப்பாவை. இது 30-பாசுரங்கள் கொண்டது. 'தொல்பாவை பாடியருள வல்லவள்' என்றும், 'சங்கத் தமிழ்மாலை பாடினவள்' என்றும் ஆண்டாள் கொண்டாடப்படுகிருள்.

"பாதகங்கள் தீர்க்கும் பரம னடிகாட்டும்
வேத மனைத்துக்கும் வித்தாகும் — கோதைதமிழ்
ஐயைந்து மைந்து மறியாத மானிடரை
வையம் சுமப்பதும் வம்பு"

என்று பஹுமானிக்கப்படும் திருப்பாவை, முதற் பாட்டிலேயே நேரிழையார்களை விளித்து, 'நாராயணனே நமக்கே பறை தருவான், பாரோர் புகழப் படிந்து நீராடுவோம் வாருங்கள்' என்று அழைக்கிறது. பாவை நோன்புக்குச் செய்யும் க்ரியைகளை 2-ம் பாட்டில் விளக்கி விட்டு, 3, 4 பாட்டுகளில் 'பாவை நோன்பை அநுஷ்டிப்பதனல் தீங்கின்றி நாடெல்லாம் திங்கள் மும்மாரி பெய்து செல்வம் நிறைந்து உலகம் வாழும்' என்பது சொல்லப்படுகிறது. 5-ம் பாட்டில் 'தூயோமாய் வந்து நாம்............தீயினில் தூசாகும்' என்றும் உறுதி கூறப்படுகிறது. 6-முதல் 15-பாட்டுகள்வரை, பள்ளியிற் படுத்துறங்கும் பாவைகளை விடியுமுன் தட்டி எழுப்பிக்கொண்டு பாவைக்களம் புக்கு, பிறகு கண்ணன் கண்வளரும் கோயிலுக்குச் சென்று அங்குறையும் கோயில் காப்பான், நந்த கோபன், யசோதை, நப்பின்னை, பலதேவர் முதலியோரையும் கண்ணனையும் துயிலெழச் செய்து, கண்ணனுக்குப் போற்றி செப்பி, அவனைச் சிங்காதனத்தில் எழுந்தருளச் செய்து, தங்கள் விண்ணப்பத்தைக் கேட்டருளும்படி வேண்டிக்கெண்டு, 'என்றென்றும் சேவகமே யேத்திப் பறை கொள்வான் இன்று யாம் வந்தோம்; இரங்கு' என்று கோப கன்னிகைகள் கேட்டுக் கொள்வது சொல்லப்படுகின்றது. 26 முதல் 29 பாட்டுகளில், நமக்கும் நாராயணனுக்கும் உள்ள உறவு ஒழிக்க ஒழியாத உறவென்றும், நாம் அறிவொன்று மில்லாதவ ராயினும் நம் கண்ணனை நண்பனகப் பெற்ற புண்ணிய முடையோம் என்றும், ஆதலின் 'குறைவொன்று மில்லாத கோவிந்தா! இற்றைக்கும்

ஏழேழ் பிறவிக்கும் உந்தன் னேடுற்றேமே யாவோம் உனக்கே நாம் ஆட் செய்வோம்; மற்றை நம் காமங்கள் மாற்று' என்று வேண்டிக்கொள்ளப் படுகிறது 30-வது பாட்டில், கண்ணன் இவர்களது நோன்பை ஏற்றுக் கொண்டதாகவும், இவர்களது நோன்பின் நோக்கம் வையத்து வாழ்வு மட்டு மல்லாமல் திருமாலின் திருவருள்பெற்று இன்புற்றிருப்பதே யென்றும் முடிவு கூறப்படுகிறது. என்று கூறி முடித்தான் சுந்து.

கண:—"நீ கூறின நூன்முகத்தால் திருப்பாவை – திருவெம்பாவை களின் பெருமைகளை ஒருவாறு உணர்ந்து கொண்டேன்; ஸந்தோஷம்; இனி இவ்விரண்டு நூற்களின் பொருள்களைப் பெரியோரிடம் விரிவாகப் படித் துணர்வேன்" என்று சொல்லிக்கொண்டே வீடு சென்றான் கணபதி.

ஸ்ரீ:

செய்திகள்

ஸ்ரீ கல்யாணபிவர்த்தினீ ஸபா, மதுராந்தகம்

டி ஸபையானது 28—12—47 ஞாயிற்றுக்கிழமை யன்று மாலை 4-மணிக்கு இக்கலாசாலை ந்யாயாத்யாபக ஸ்ரீ. உப. A. S. க்ருஷ்ணமாசார்ய ஸ்வாமியின் ஆத்யக்ஷ யத்தில் கூடிற்று, அப்போது T. பார்த்தஸாரதி என்னும் வித்யார்த்தியால் "ஸத்ஸங்கஃ கூளாய ஃழெ" என்னும் பொருள்பற்றி வ்யாஸம் எழுதிப் படிக்கப்பட்டது. அத்யக்ஷ ஸ்வாமியாலும் மற்றும் மாணக்கர்களாலும் டி விஷயம்பற்றி விளக்கமாக உபந்யாஸம் செய்யப்பட்டது.

3—1—48 சனிக்கிழமை யன்று டி ஸபையானது வ்யாகரணத்யாபகர் ஸ்ரீ. உப. வரதராஜ அய்யங்கார் ஸ்வாமியின் ஆத்யக்ஷயத்தில் கூடிற்று. K. P. திருமலை தாதாசாரி என்னும் வித்யார்த்தியால், "யொ மி நாஜ தவஹாவிளுஸிஃ" என்பதுபற்றி வ்யாஸம் படிக்கப்பட்டது. டி பொருளைப்பற்றி வித்யார்த்திகள் விஷய விசாரம் செய்தனர். பிறகு அத்யக்ஷரால் அவ்விஷயம் நன்கு உபந்யஸிக்கப்பட்டது.

6–1–48 செவ்வாய்க்கிழமை இச்சபையின் சார்பாக ஸ்ரீ அஹோபிலமடம் 40-வது பட்டம் ஸ்ரீ அழகிய சிங்கருடைய திருநக்ஷத்ர மஹோத்ஸவம் கொண்டாடப்பட்டது. ஸ்ரீ.உப.ந்யாயாத்யாபகர் V.D. ஸம்பத்குமார தாதாசார்ய ஸ்வாமி ஆத்யக்ஷ்ய வஹித்தார். கலாசாலை உபாத்யாய ஸ்வாமிகள் அனைவரும் எழுந்தருளி யிருந்தார்கள். அத்யக்ஷ ரால் "ஆசாய ழ ணஹ ணஙு ஸஂவா" என்னும் விஷயம் உபந்யஸிக்கப்பட்டது. உபாத்யாயர்களும் சில வித்யார்த்திகளும் ஆசார்ய வைபவத்தைப்பற்றிப் பேசினர்கள்.

9—1—48 வெள்ளிக்கிழமை ஸ்ரீ. உப. அத்யாபகர். T C. ஸுந்தரராஜாசார்ய ஸ்வாமியின் ஆத்யக்ஷ்யத்தின் கீழ் இந்த ஸபையானது கூடிற்று. P. N. க்ருஷ்ணமாச் சாரி என்னும் வித்யார்த்தியால் "ஹக்தி" என்னும் பொருள் பற்றி உபந்யஸிக்கப் பட்டது. வித்யார்த்திகளால் விஷய விசாரமும் அத்யக்ஷரால் உபந்யாஸமும் செய்யப் பட்டன.

19 -1—48 திங்கட்கிழமை டி ஸபையானது. ஸ்ரீ. உப. வேதாந்த வாவதூகர் ந்யாயாத்யாபகர் P. நாராயணசார்ய ஸ்வாமியின் ஆத்யக்ஷ்யத்தில் கூடிற்று. A. S. ஸ்ரீநி வாஸன் என்னும் மாணக்கனல் "வெஷாயஷ்ய நஸூ ஶுவஸூகதா" என்பதுபற்றி

வ்யாஸம் எழுதிப்படிக்கப் பட்டது. வித்யார்த்திகள் விஷய விசாரம் செய்தபிறகு அத்ய க்ஷரால் ஷை விஷயம் உபந்யஸிக்கப்பட்டது.

ஷை ஸபையானது 25—2—48 புதன்கிழமை யன்று மாலை 3-30 மணிக்கு ஸ்ரீ. உ. வே. வ்யாகரணத்யாபகர் M. S. நரஸிம்ஹாசார்ய ஸ்வாமியின் ஆத்யக்ஷயத்தில் கூடிற்று. P. S. ராஜகோபாலன் என்னும் வித்யார்த்தி “நைகாந்த உ॰:வ: வ॰ஶ॰ஷ: வரயிவத்ராழ” என்பது பற்றி வ்யாஸம் எழுதிப் படித்தான். வித்யார்த்திகளால் விஷய விசாரம் செய்யப்பட்டு, தலைவரால் நன்கு உபந்யஸிக்கப்பட்டது. கார்ய தர்சியால் வந்தனோபசாரம் கூறப்பட்டு மங்களத்துடன் ஸபை இனிது முடிந்தது.

P. K. ராமபத்ரன்
P. N. க்ருஷ்ணமாச்சாரி
கார்யதரிசிகள்.

* * * * *

ஸ்ரீ அஹோபில மடம் 42-வது பட்டம் ஸ்ரீ அழகிய சிங்கரின் 69-வது திருநக்ஷத்ர மஹோத்ஸவமானது பாதூர் அக்ரஹாரத்தில் ஸ்ரீ ஸந்நிதி சிஷ்யகோடிகளால் வெகு விமர்சையாக நடத்தப்பட்டது. ஸ்ரீ அழகிய சிங்கருடைய திருவுருவப் படத்திற்கும் ஸ்ரீ பாதுகைகளுக்கும் நான்கு வீதிகளிலும் உத்ஸவம் கண்டருளப் பண்ணி, சுமார் 500 ஸ்ரீ வைஷ்ணவர்களுக்குத் ததீயாராதநமும், மாலை ஸ்ரீ. உப. வித்வான் கோமல் சேஷாத்ரியாசார்ய ஸ்வாமியால் 4 திநங்கள் ராமாயணாதி உபந்யாஸங்களும் நடத்தப்பட்டன.

P. K. ராமபத்ர தாஸன்.

* * * * *

ஸ்ரீ அஹோபில மடம், ஸ்ரீரங்கம்

இவ்வூர் ஸ்ரீ அஹோபில மடத்தில், சில திநங்களாக, ஸாயங்கால வேளையில் ப்ரதிதிநம் ஸஹஸ்ரநாம பாராயணமும் நித்யாநுஸந்தாந பாராயணமும், ஆஸ்திகர்களால் ஏற்பாடு செய்யப்பட்டு அவை நடந்துகொண்டு வருகின்றன. பாராயணம் முடிந்ததும், கோஷ்டி விநியோகம் நடைபெறுகிறது ராத்ரி காலத்தில், லௌகிகத்தில் இருந்துவரும் சிலர்க்கு, நித்யாநுஸந்தாநம் திருவாராதந க்ரமம் முதலியன கற்றுக் கொடுக்கப்பட்டு வருகின்றன ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹன் அநுக்ரஹத்தாலும் ஸ்ரீ அழகிய சிங்கர் க்ருபையாலும், இந்த வ்யாபாரங்கள் நிர்விக்நமாக நடக்குமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

நரஸிம்ஹ தாஸன்.

* * * * *

மஹா வித்வான் திரு. நாராயணையங்கார் ஸ்வாமியின் மறைவு

மதுரைச் செந்தமிழ்ப் பத்ரிகை ஆசிரியரும், மதுரைத் தமிழ்ச் சங்க கலாசாலைக்கு அதிபரும், உலகம் போற்றும் உத்தம வித்வானுமாகிய திரு. நாராயணையங்கார் ஸ்வாமி, ஸர்வஜித்வ ஆடி மீ 13௳ (29—7—47) செவ்வாய்க்கிழமை யன்று, தமிழ்த் தாயின் மனம் நோக, தமிழபிமானிகள் மனம் துடிக்க, இம்மண்ணுலகை நீத்து விண்ணுலகடைந்தார் என்பதைக் கேட்க, ஸபையோர்கள் அனைவரும் பெருந்துயர் அடைகின்றனர் இம்மஹானுடைய பிரிவைக்குறித்து, இச்சபையோர்களுடையவும் அடியேனுடையவும் ஆழ்ந்த அநுதாபத்தை அந்த ஸ்வாமியின் குடும்பத்தினர்க்கும் பந்துமித்ரர்களுக்கும் ஸமர்ப்பித்துக் கொள்கிறேன்.

கடாம்பி. R. நரஸிம்ஹாசார்யர்,
கார்யதர்சி, ஸ்ரீ. வி. ஸ. ஸபா தேரழுந்தூர்.

ஸ்ரீ:

𑌶𑍍𑌰𑍀𑌮𑌤𑍇 𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑍀𑌨𑍃𑌸𑌿𑌂𑌹 𑌪𑌰𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑍇 𑌨𑌮𑌃

[illegible]
[illegible] ।
[illegible]
[illegible] ॥

ஸம்பாதகரின் குறிப்புக்கள்

ஸ்ரீ அழகிய சிங்கரின் உதார சரிதம்

ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹன் திருநின்றவூரில் வித்வத் ஸதஸ் மஹோத்ஸவத்தையும் ஸ்ரீ அழகிய சிங்கருடைய திருநக்ஷத்ர மஹோத்ஸவத்தையும் மிக்க உகப்புடன் அநுபவித்துவிட்டு, மறுபடியும் தனக்கு ஸொந்தமாக உள்ள திருவெவ்வுளூருக்கு எழுந்தருளி விட்டான்.

"[illegible] ।
[illegible] ॥"

ஸ்ரீ அழகிய சிங்கர் ஆஸ்தானத்துக்கு எழுந்தருளின காலத்தில், யாத்ரா மஹோத்ஸவத்தில் அதி மாத்ரம் ஔத்ஸுக்யத்தை உடைத்தாயிருந்த அந்த எம்பெருமான், இரண்டு மூன்று வர்ஷகாலம் யாத்ரையைப் பூர்ணமாக அநுபவித்து, இப்பொழுது அதில் ஒரு அநாதரத்தை அடைந் திருக்கிறான். ஸ்ரீ அழகிய சிங்கருடைய திருமேனியின் அபாடவம் அதற்கு ஒரு முக்யமான காரணம். காலத்தின் கொடுமையால் தேசத்தில் நாலு பக்கங்களிலும் ஏற்பட்டிருக்கும் க்ஷோபம் மற்றொரு காரணம். நம்முடைய அறிவிற்குக் கோசரமாகாமலும், எம்பெருமானுக்கே தெரிந்தவையாயுமுள்ள வேறு பல காரணங்களும் இருக்கக்கூடும். இம்மாதிரி பல காரணங்களால் ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹன் ஒரே ஸ்தலத்தில் எழுந்தருளி யிருக்கத் திருவுள்ளம் பற்றிவிட்டதாகத் தெரிகிறது. ஒருக்கால் மழை பெய்து, ஸ்ரீ மதுராந்தகம் ஜலத்தால் ரமணீயமானால், திருவெவ்வுளூரை விட்டு மதுராந்தகத்துக்கு எழுந்தருளினாலும் எழுந்தருளலாம். ஆனால் மற்றுமொரு காரணத்தைப் பார்த்தால், ஸ்வல்ப காலம் ஒரே ஸ்தலத்தில் எழுந்தருளி யிருப்பதே உசிதமாக இருக்கலா மென்று தோன்றுகிறது. ராஜாங்கத்தார் தமக்குத் தோன்றின சிற் சில ஆநுகூல்

யத்தை உத்தேஸித்து, இம்மாதிரியான மடங்களின் பரிபாலநத்தில் பல மாறுதல்களைச் செய்யப்போவதாக அறிகிறோம். அம்மாறுதல்களுக்குத் தக்கவாறு ஸமீகரணம் முதலானவைகளை அவ்யாகுலமாகச் செய்து கொள்வதற்கு எவ்வித ஸஞ்சாரமு மின்றிக்கே ஒரே ஸ்தலத்தில் எழுந்தருளி யிருப்பதும் யுக்தமே ஆகும்.

ஸ்ரீ அழகிய சிங்கர் நமது ஸித்தாந்தத்தின் அபிவ்ருத்திக்கு ஸாதநங்களாக அவலம்பித்திருக்கும் உபாயங்களுள், வார்ஷிக வித்வத் ஸதஸ்ஸூம் ஶாஸ்த்ர பாடஶாலையின் ஸ்தாபநமுமே மிக ப்ரதாநங்கள். திருநின்றவூரில் இவ்வர்ஷம் நடைபெற்ற வித்வத் ஸதஸ்ஸின் பெருமையைப் பார்த்தவர்களுக்கு அதன் ப்ராதாந்யம் நன்கு விளங்கும். சற்றேறக் குறைய ஆரூடர்களான வித்வான்கள் முப்பது ஸ்வாமிகள் அப்போது ஸேவை ஸாதித்தார்கள். வித்யையைப் பூர்ணமாக க்ரஹித்து, ஸமீசீந ஸம்ஸ்காராபாவத்தால் கொஞ்சம் மலிநமாக இருக்கும் ஜ்ஞாநத்தையுடைய மத்யஸ்த வித்வான்களும் சற்றேறக் குறைய ஐம்பது திருநாமங்கள் எழுந்தருளி யிருந்தார்கள். வித்யா ஸம்பாதநத்தில் ச்ரத்தையையுடைய வித்யார்த்திகளும் நூறு பெயர்களுக்குக் குறையாமல் அப்போது அங்கு வந்திருந்தார்கள். கேவலம் அநப்புஸூயுக்களான ஸாதுக்களும் அநேகர் வந்திருந்தனர். இவர்கள் எல்லாருக்கும் கதாகதி ப்ரயுக்தமான செலவைக் கொடுப்பதைத் தவிர்த்து, அவரவர்களுக்குத் தக்கவாறு விம்ஶதி ரௌப்யத்துக்குக் குறையாமல் ஸம்மாநத்தையும் ஸ்ரீ அழகிய சிங்கர் அநுக்ரஹித்தருளினர். ஒரு நாள்கூட ஸதஸ்ஸில் அந்வயிக்காமல் அநேக நிர்ப்பந்தங்களால் தடைப்பட்டு, கடைசி தினத்தன்று மாத்ரம் எழுந்தருளின வித்வாந்கள் பலர். அவர்களெல்லாரும் நமது ஸித்தாந்தத்தில் வைதுஷ்யம் ஸம்பாதித்தவர்கள் என்னும் வ்யாஜத்தை அவலம்பித்து, அவர்களை அநாதரியாமல் அவர்களுக்கும், மற்றவர்களுக்குத் துல்யமாக ஸ்ரீ அழகிய சிங்கர் ஸம்மாநாதிகளால் உபசாராதிகளைச் செய்தருளினர். இது ஸ்ரீ அழகிய சிங்கரின் உதார சரிதத்தை விளக்குகின்றதன்றோ? அர்த்த ரூபமான இந்த ஸம்மாநம் மாத்ரம் ரூபாய் மூவாயிரத்துக்கு மேலாகவே செலவாகி யிருக்கலாம். ஸ்ரீ புத்தங்கோட்டகம் ஸ்வாமியும், ஸ்ரீ தேவனார் விளாகம் ஸ்வாமியும், இன்னும் இவர்களைப் போன்ற ப்ரதிஷ்டித ஜ்ஞாந முடையவர்கள் ஸதஸ்ஸூக்கு எழுந்தருளாமல் இருந்தது பெரியதொரு குறையே. அவர்களைப் போன்ற மஹா வித்வான்கள் இம்மாதிரியான ஸதஸ்ஸை அலங்கரித்தால், அது அந்த ஸதஸ்ஸூக்கு ஒரு அஸாதாரண ஶோபையைக் கொடுக்குமன்றோ?

இது பர்யந்தம் ஒவ்வொரு ஸம்வத்ஸரத்திலும் ஸதஸ்ஸூக்கு எழுந்தருளும் ஸ்வாமிகளுக்கு ததீயாராதநத்தை ஸ்ரீ ஸந்நிதியிலேயே, ஸ்ரீ ஸந்நிதி கைங்

கர்யபரர்களே நடத்தி வருவது வழக்கம். இந்த ஸம்வத்ஸரத்தில் அந்தக் கைங்கர்யத்தை இன்னும் அதிகமான பரிஷ்காரத்துடன் நடத்த வேண்டுமென்று மூன்று மஹான்கள் ப்ரவர்த்தித்து, இதற்காகத் தாங்களே த்ரவ்ய ஸஹாயம் செய்ததோடு, அநேக ப்ரபுக்களிடமிருந்தும் த்ரவ்யத்தை ஸம்பாதித்து, தாமே ததீயாராதநத்துக்கு அபேக்ஷிதங்களான பதார்த்தங்களை யெல்லாம் சுத்தங்களாக ஸேகரித்து, அவை யெல்லாவற்றையும் யதாகாலம் யதோசிதம் விநியோகித்து, ஸேவார்த்திக ளெல்லாரும் அதீவ த்ருப்தர்களாய் ஆநந்திக்கும்படி செய்து வைத்தார்கள். ஸ்ரீ. உப. காளி அண்ணு ஸ்வாமி, லாலாபேட்டை ஸ்ரீ. உப. தேஸிகாசார்ய ஸ்வாமி, ஸ்ரீ. உப. பாராஞ்சி க்ருஷ்ண ஸ்வாமி ஐயங்கார் ஸ்வாமி, இம்மூவர்களே அந்தப் பாரத்தைப் பூர்ணமாக ஏற்றுக்கொண்டவர்கள். முக்கூர் ஸ்ரீ. உப. ராஜகோபாலாசார்ய ஸ்வாமியும் இந்தக் கைங்கர்யத்தில் தைஹிகமாகப் பூர்ணமாய் அந்வயித்திருந்தார். இவர்களெல்லாரும் ஸதஸ் ஆரம்பிப்பதற்கு முன்னதாகவே ஸ்ரீ அழகிய சிங்கரிடம் போய், இந்த ஸம்வத்ஸரத்தின் ததீயாராதந கைங்கர்யத்தைத் தங்களுடைய பரமாகச் செய்ய அநுமதியளிக்க வேண்டுமென்றும், அந்தக் கைங்கர்யத்தைத் திருநின்றவூரில் நடத்தத் தங்களுக்குச் சில ஸௌகர்யங்கள் இருக்கிறபடியால், இவ்வர்ஷத்து ஸதஸ்ஸைத் திருநின்றவூரிலேயே நடத்த க்ருபை செய்ய வேண்டுமென்றும் ப்ரார்த்தித்தார்கள். பக்த பராதீநனான ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹன் ஸ்ரீ அழகிய சிங்கருடைய திருவுள்ளத்தில் புகுந்து, ஸ்ரீ அழகிய சிங்கரை அப்படியே திருவுள்ளம் பற்றும்படி செய்தான். தைமீ 19உ ஞாயிற்றுக்கிழமை ஆரம்பித்த ததீயாராதநம், மாசிமீ 2உ பர்யந்தம் நடைபெற்றது. “ந தேஷு ஹஸ்தேஷு ஜ்ஞாநோ வா க்ஷயிதோ வாபவர்த்ததே” அநந்ய ப்ரயோஜநமாக இக்கைங்கர்யத்தில் அந்வயித்த இவர்கள் எல்லாரையும் ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹன் பூர்ணமாக அநுக்ரஹிக்கவேணு மென்பது நம்முடைய ஹார்த்தமான ப்ரார்த்தனை.

* * * *

ஸ்ரீமதுராந்தகம் கலாசாலை

மதுராந்தகத்தில் நடந்து வரும் பாடசாலையும் த்ருப்திகரமாகவே நடந்து வருகின்றது. அதில் அந்வயித் திருக்கும் கைங்கர்ய பரர்கள் எல்லாரும், கைங்கர்ய புத்தியுடனேயே தம் தம் தர்மங்களைச் செய்து வருகிறார்கள். வித்யார்த்திகளும் ச்ரத்தையுடன் வித்யாக்ரஹணம் செய்து வருகிறார்கள். ப்ரவசந கர்த்தாக்களின் ச்ரம தக்ஷிணையும், மற்றைச் சிப்பந்திகளின் சம்பளமும் சற்றேறக்குறைய ரூ. 600. ம், போஜந சாலையில் அரிசி நீங்கலாக

ரூ. 700-ம், ஆகமொத்தம் ரூ. 1300 ஒவ்வொரு மாஸத்திலும் செலவாகின்றது. வேறு சில்லரைச் செலவுகளும் அப்பாடசாலை ஸம்பந்தமாக யதாக்ரமம் நடைபெற்று வருகின்றன. 'இவ்வளவு செலவுக்கு அநுகுணமாக ப்ரதி ப்ரயோஜநம் கிடைக்கிறதா ? இதன் பரிபாலநம் முழுவதும் ஸாதுவான ரீதியில் நடந்து வருகின்றதா?' என்று சிலர் குறை கூறுவதை நாம் அறிவோம். குணத்ரய பரவஶர்களான கைங்கர்யபரர்களால் நடத்தப்பட்டுவரும் கைங்கர்யங்கள், எவ்வளவு நிர்த்துஷ்டமாக நடத்தப்பட்டு வரக்கூடுமோ, அவ்வளவு நிர்த்துஷ்டமாக இப்பாடசாலை வ்யாபாரங்கள் நடத்தப்பட்டு வருகின்றனவென்றே நாம் சொல்வோம். ஸ்ரீ அழகியசிங்கரும் பாடசாலையின் அம்ஶங்களை ஸ்வயமே பரிசீலித்துப் பார்த்து அநுக்ரஹித்து வரும்படி இருக்கின்றது. இதரர்கள் பாரதந்த்ர்ய காஷ்டையை அநுஸரித்துக்கொண்டு ஸ்ரீ அழகியசிங்கருடைய நியமநப்படி நடந்து வருகிறார்கள். ஸர்வ நியந்தாவான ஸ்ரீலக்ஷ்மீ ந்ருஸிம்ஹன், இந்தக் கைங்கர்யத்தில் ஸம்பந்தப் பட்டிருப்பவர்கள் எல்லாருடைய மநோபாவத்தையும் ஸாதுவான மார்க்கத்திலேயே ப்ரவர்த்திப்பித்து இந்தத் தர்மத்தை எவ்விதப் பழுதுமிராமல் நடத்தி வைக்கவேணு மென்பது நமது ப்ரார்த்தனை.

* * * *

காந்திஜியின் சில உத்தம குணங்கள்

மஹாத்மா காந்தியினிடம், லோகத்தில் ப்ராயேண அஸம்பாவிதங்களாயும் கேவலம் க்ரந்தங்களில் மாத்ரம் ப்ரஸ்தாவிக்கப்பட்டவைகளாயுமுள்ள சில உத்தம ஆத்மகுணங்கள் இருந்தன. 'காந்திஜி ஶாஸ்த்ரங்களிற் சில அம்ஶங்களை நம்பாதவராயிருக்க அவருக்கு எப்படி இந்த உத்தம குணங்களில் விச்வாஸம் ஏற்பட்டது?' என்று ஒரு ஸந்தேஹம் ஜநிக்கலாம். ஜகத் வ்யாபாரத்தில் கர்மங்களின் கதி மிகவும் விசித்ரமான தன்றோ? ஒரு கர்ம மடியாக ஒரு ஏற்றமும், மற்றொரு கர்ம மடியாக ஒரு தோஷமும் ஒரு வ்யக்திக்கே ஸம்பவிக்கக் கூடும். ஜநநாந்தரத்தில் ஏற்பட்ட பரிசயங்கள் பாவஸ்திரங்களாக ப்ரகாஶிக்கு மல்லவா ?

காந்திஜியினிடம் இருந்த உத்தம குணங்களுள் சிலவற்றை இவ்விடத்தில் உதாஹரிக்கத் துணிகின்றோம். முதலாவது: அவர் மனுஷ்யர்களின் வ்யஸநத்தைக் கொஞ்சமேனும் ஸஹியாதவர். "வ்யஸநேஷு மநுஷ்யாணாம் ப்ருஶம் பவதி து:கித:". வ்யஸநங்களால் வருந்தும் ஜநங்களுக்கு உதவி செய்வதையே தமது புருஷார்த்தமாக உணர்ந்தவர். அதுதான் உயர்ந்த பகவதாராதந மென்பது அவருடைய நம்பிக்கை; பகவானைத் தமது ப்ரியதமனை

ஸுஹ்ருத்தாய் விச்வஸித்தார். அதனால்தான் இதரர்களுக்குத் துச்சகமான வ்யாபாரம் அவருக்கு ஸுசகமாயிற்று.

“ ஸுஹ்ருதம் ஸர்வபூதாநாம் ஜ்ஞாத்வா மாம் ஶாந்திம்ருச்சதி ”

பகவானை ஒருவன் தனது ஸுஹ்ருத்தாக உணர்ந்தால், அவனுடைய ஆராதநமாகிற வ்யாபாரங்கள் எல்லாவற்றிலும் ஸுகமாக ப்ரவ்ருத்தி ஏற்படுமென்று ஸ்ரீ கீதாசார்யன் அநுக்ரஹித்திருக்கிறான்.

“ ஸுஹ்ருதாராதநாய ஹி ஸர்வே ப்ரயதந்தே ”

[லோகத்தில் ஶாஸ்த்ர நிஷ்டர்கள் மாத்ர மின்றிக்கே, பாமரர்களும் சிவதிர்யக்குக்களும் கூடத் தம்மிடம் ப்ரீதராயிருப்பவர்களை ஸந்தோஷத்துடன் அநுவர்த்திக்கிறார்க ளல்லவா?] என்பது அவ்விடத்தில் காணப்படும் ஸ்ரீ பாஷ்யகாரருடைய திவ்ய ஸூக்தி. அம்மாதிரியான ஸௌஹார்த்தத்தைப் பகவானிடத்தில் கொண்டாடி, தீநர்களுக்கு உழைப்பதே பகவானுக்கு இஷ்டதமமான ஆராதநமென்று நம்பி, காந்திஜி தமது வாழ்நாள் முழுவதையும் அந்த வ்யாபாரத்திலேயே ப்ரவர்த்தித்து நின்றார். இவ்வாறு பகவானிடத்தில் ஸௌஹார்த்தத்தைப் பாராட்டி, அது காரணமாக அவனுக்கு அத்யந்தம் இஷ்டமான தீந ஸம்ரக்ஷண மாகிற ஆராதநத்திலேயே ப்ரவர்த்திப்பவர்கள் மிகவும் துர்லபரன்றோ?

இரண்டாவது: தம்மை மாநஸிகமாக த்வேஷிக்கிறவர்கள் பக்கலிலோ, வாசிகமாகவும் காயிகமாகவும் அபகாரம் செய்பவர்கள் பக்கலிலோ, ‘இவர்கள் நம்மை த்வேஷிப்பவர்கள்; இவர்கள் நமக்குத் தீமை செய்கிறவர்கள்’ என்னும் அநுஸந்தாநம் ஒருபொழுதும் கொஞ்சமேனும் காந்திஜிக்கு ஜநித்ததில்லை. ப்ரத்யுத, அவர்களிடம் மைத்ரியைச் செய்து, அவர்களுக்கு ஹிதத்தைச் செய்வதிலும், அவர்களுக்கு ஏதாவது துக்கம் நேர்ந்தால் அந்தத் துக்கத்தை நிவர்த்திக்க முயல்வதிலுமே இவருடைய நோக்கம் இருந்து வந்தது. இவ்வாறு இருப்பதை ஸ்வரூப நிஷ்டையைப் பெற்றவனுடைய லிங்கமாக வன்றோ நமது ஆசார்யர்கள் பேசியிருக்கிறார்கள்? பரிவாதாதிகளைச் செய்பவனிடத்தில் நிர்விகார சித்ததையும், அவர்களிடம் கரைபுரண்ட க்ருபையும் ஸ்வரூப நிஷ்டையின் அடையாளங்கள். இது அத்யந்தம் அபூர்வ மன்றோ? இந்தக் குணத்தை ஸ்ரீ கீதாசார்யன், ஆத்ம நிஷ்டையில் ப்ரவ்ருத்தியைச் செய்யும் கர்ம யோகிகளுக்கு உபாதேயமாகப் பேசியிருக்கிறான்.

“ அத்வேஷ்டா ஸர்வபூதாநாம் மைத்ர: கருண ஏவ ச ”

[கர்ம யோகத்தில் நிஷ்டையைப் பெற்றவன் தனக்குத் தீங்கு செய்பவரிடத்தில்

த்வேஷம் பாராட்டமாட்டான் ; அதுமாத்ர மின்றிக்கே, அவர்களிடம் ஹித புத்தியைச் செய்வான் ; அதுவும் தவிர, அவர்களுக்கு ஏதாவது ஒரு வ்யஸநம் நேர்ந்தால் அவர்கள் பக்கல் கரை புரண்ட க்ருபையைச் செய்வான்.] இவை அந்த யோகிகளுடைய குணங்களாகப் படிக்கப்பட்டிருக்கின்றன. இந்த ஸ்வபாவம் காந்திஜியினிடம் பூர்ணமாக இருந்ததென்பதை அவருடன் பழகினவர்கள் அறிவார்கள்.

மூன்றாவது: கார்ப்பண்யம் என்னும் மிகவும் உயர்ந்த குணம் இவரிடம் இருந்தது பெரிய வியப்புக்குக் காரணம். உத்தர க்ருத்யத்தில் கரண த்ரயங்களாலும் பரிஹரணீயங்களில் ஸார மிருக்கும் படியைச் சொல்லுமிடத்தில், "கார்ப்பண்யம் குலையாமைக் காகச் சொல்லா தொழிய வேண்டுமவற்றுள் ப்ரதாநம் ஆத்மோத்கர்ஷம்" என்று ஸ்வாமி அநுக்ரஹித்திருக்கிறார். இந்த ஆத்மோத்கர்ஷ புத்தியைக் காந்திஜி மிக்க தூரத்திலேயே பரிஹரித்தவர். 'தாம் உயர்ந்தவர் ; மற்றவர்கள் தம்மை விடத் தாழ்ந்தவர்கள்' என்னும் நினைப்பு இவரிடம் கிடையாது.

"உத்க்ருஷ்டம் ஶ்ரோத்ரியம் வாபி நிஷாதம் ஶ்வபசம் ததா ।
வீக்ஷதே ஜாதிஸாமாந்யாத் ஸ யாதி நரகம் நர: ॥"

[எவனொருவன் பாகவதன் விஷயத்தில், 'இவன் ப்ராஹ்மணன் ; ஆகையால் உயர்ந்தவன் ; இவன் அப்ராஹ்மணன் ; ஆகையால் அவன் தாழ்ந்தவன்' என்று சிந்திக்கிறானோ அவன் நிச்சயம் நரகம் புகுவான்] என்று ஶாஸ்த்ரம் சொல்கின்றது. இது பாகவதர்கள் விஷயமானாலும், காந்திஜி இதைக் கேவலம் பாகவதர் விஷயத்தில் மாத்ரம் கொண்டாடாமல் சேதந வஸ்துக்கள் எல்லாவற்றிலும் கொண்டாடி வந்தார். இப்படி வரப்பு கடந்து கொண்டாடுவது அஶாஸ்த்ரீயமே. ஆனால், அது அவருடைய கார்ப்பண்ய மென்னும் உத்தம குணத்தின் காஷ்டையைக் காட்டுகிற தென்றே நாம் அதைப் பாராட்டுகிறோம். குலத்தாலோ ரூபத்தாலோ வித்யையாலோ தநத்தாலோ ஏற்படும் மதம், அதிகாரத்தை நஶிப்பித்துவிடு மென்பதில் ஆக்ஷேப மேது? ஸ்ரீ பராஶர பட்டர், தம்மை ச்வாவுக்கும் நிக்ருஷ்டராக அநுஸந்தித்தார். அவரைப் போன்ற ஆசார்ய வர்யர்களிடம் அம்மாதிரியான அநுஸந்தாநம் காணப்படலாம். ஜந ஸாமாந்யத்தினிடத்தில் அது அதி துர்லபமே. இம்மாதிரியான உத்தம குணங்கள் காந்திஜியினிடம் குடி கொண்டிருந்தன வென்றால், அவரை 'மஹாத்மா' வென்று ஜநங்கள் கொண்டாடுவது அவருக்குத் தகாததாகுமோ?

* * * *

உபாதானோபாதேய பாவத்தின் லக்ஷணத்தைப் பற்றி ஸ்வல்ப காலமாக ஒரு விவாதம் ஸ்ரீ ந்ருஹிம்ஹ ப்ரியா வாயிலாக நடந்து வருவதை நமது ஸுஹ்ருத்துக்கள் கவனித்திருக்கலாம். ஸ்ரீ. உப. மதுராந்தகம் வீரராகவாசார்ய ஸ்வாமி மறுபடியும் ஒரு லேகம் அனுப்பியுள்ளார். அது இந்த ஸஞ்சிகையில் வெளியிடப் பட்டிருக்கின்றது. அவரைத் தவிர்த்து, திருப்பாப்புலியூர் ஸ்ரீ. உப. ஶடகோபாசார்ய ஸ்வாமியும், பம்பாய் ஸ்ரீ. உப. ஸ்ரீநிவாஸையங்கார் ஸ்வாமியும் லேகங்களை அனுப்பியிருக்கிறார்கள். பெருமாள் கோவில் பரமஹம்ஸேத்யாதி விஶேஷண விஶிஷ்டராய் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ. கோழியாலம் ஸ்வாமியும் தமது திருவுள்ளத்தை நியமித்திருக்கிறார். இவர்களுடைய உக்திகளில், ஏற்கெனவே ஸ்ரீ மதுராந்தகம் ஸ்வாமியால் விவரிக்கப்பட்ட விஷயமே சொல்லப்படுகிறபடியால், அவைகளை ப்ரசுரம் செய்வது அவச்யமில்லை யென்று எண்ணி, அவைகளை ப்ரசுரம் செய்யாமல் நிறுத்திவிட்டோம். இது ஒரு அபராதமானால், அந்த ஸ்வாமிகள் அந்த அபராதத்தை க்ருபையுடன் க்ஷமிக்கவேணும். நிற்க: இப்படிப்பட்ட மஹாவித்வான்கள் ஏகமுகமாக ஒரு நிர்ணயத்தை ஸாதிக்கும்போது, அத்யந்தம் மிசஜ்ஞனை அடியேன் அதை அங்கீகரியாமல் இருப்பது பரிஹாஸாஸ்பதமே ஆகுமாதலால், அவர்களுடைய நிர்ணயத்தை ஒத்துக்கொண்டு "ஶாஸ்த்ரேஷு நிபுணோ ஜனஃ" என்று இந்தச் சர்ச்சையிலிருந்து விரதனகிறேன். இப்படி அடியேன் விலகுவதும் இப்பொழுது நமக்குக் கிடைத்துள்ள லேகங்களை ப்ரசுரம் செய்யாமலிருப்பதற்கு மற்றுமொரு காரணம். விஷய விவாதமானது ப்ரதிபக்ஷி ஒருவருமிராத இடத்தில் அஸம்பாவித மன்றோ?

உபாதான உபாதேய பாவ விசாரம்

கண்களுக் கினிய காட்சிகளைக் கண்டு களிப்பதல்லவா கண்கள் படைத்ததின் பயன்? இதோ இப்பக்கம் கவனி. என்ன ஆச்சர்யம்! முனிவர்களின் தவ மஹிமையினுல் ம்ருக பக்ஷிகள் ஒன்றுக்கொன்று பகைமை நீங்கி ஸஞ்சரிப்பதைப்போல், இவ்வநதேவதையின் திவ்ய சக்தியினுல் இவ்வநத்திலும் ப்ராணிகள் பயமற்று உல்லாஸமாய் உலாவுகின்றன பார்!

ஒவ்வொரு மரங்களின் அடியிலும் கொழுத்த காட்டு யானைகளைப் பார்த்தாயா? அவைகளுக்கு ஶத்ருவாகிய கவய மென்னும் ம்ருகக் கூட்டங்கள், தாங்கள் தண்ணீர் அருந்துவதையும் பொருட்படுத்தாமல் யானைகளின் ஸமீபத்தில் வந்து குலாவுகின்றன. இதோ இப்பக்கம் பார். இது விந்தையிலும் விந்தை! அதி பயங்கரமான ஸிம்ஹத்தின் அருகில் பெண் மான்கள் எவ்வளவு அழகாய் வரிசை வரிசையாய் அணிவகுத்தாற் போல் நிர்ப்பயமாய் நிற்கின்றன. அதுவுமன்றி, தங்கள் கழுத்தை உயரத் தூக்கிச் சிங்கங்களின் கூரிய நகங்களால் சொரியுமாறு வெகு ஸ்வாரஸ்யமா யன்றோ காட்டுகின்றன?

விது:—ஸ்வாமி! இதோ ஒரு அதிஶயக் காட்சி. உடல் முழுவதும் ரோம மயமாய் விளங்கும் இப்பெண் கரடியைக் கடாக்ஷிக்கவேண்டும். இதைப் பார்த்தால் எனது நாயகியின் நினைவு வருகிறது. அவள் என்னுடன் கொஞ்சிக் குலாவுவதுபோல் இதுவும் ஆண் கரடியுடன் விளையாடுகிறது.

பகவான்:—[களுக்கென நகைத்து] நண்பா! உன் விகடமே விகடம். ஆஹா! என்ன ஹாஸ்ய ரஸம்! ஸரி: இருக்கட்டும்; இப்பொழுது நாம் வன தேவதையின் கோவிலுக்குள் செல்வோம். [ப்ராகாரத்தினுள் செல்கின்றனர்.]

[ஸந்நிதிக்குள்] தோழிமார்களே! தேவியைப் பூஜிக்கவேண்டும். அதற்குத் தேவையாகிய புஷ்பம் பழம் முதலிய ஸாமக்ரிகளைச் சீக்ரம் கொண்டு வாருங்கள்.

பகவான்:—[முகத்தில் ஆச்சர்யம் விளங்க] நண்பா! இதென்ன பேச்சுக்கள் கர்ப்ப க்ரஹத்தினுள்! வநதேவதையின் ஆராதநத்தில் முனைந்திருக்கும் பெண்மணியின் பேச்சுக் குரல்கள் அவை என எண்ணுகிறேன். பொறு; அதைச் சற்று உற்றுக் கேட்போம். [இரண்டடி முன் செல்கின்றனர்.]

விது:—[கைவிரலால் சுட்டிக் காட்டி] ப்ரபோ! இப்பெண்ணரசி யார்? நமது முன்னிலையில் அழகுக் கடல்—லாவண்ய ராஶி—ஸௌந்தர்ய வடிவம் ஒன்று தென்படுகிறதே!

பகவான்:—[அதி ப்ரேமையுடன் உற்று நோக்கி மந்தஹாஸம் ததும்ப] நண்ப! ஆம்; உண்மை. இந்நாளே நன்னுள். நாம் புரிந்த பாக்யம். "நமது கண்கள் முன் ஜந்மத்தில் செய்த பெருந்தவமோ? அல்லது நமது ஆயுளை வளர்க்கும் ஸித்தௌஷதமோ? இல்லையேல் ச்ருங்கார ரஸங்கள் அனைத்திற்கும் இருப்பிடமோ? அல்லது ஒரு ஸமயம் பிரமன் அழகு ஸுந்தரிகளை ஸ்ருஷ்டிப்பதின் பொருட்டு நிர்மித்த மாதிரி மங்கையோ? ஒரு ஸமயம் மேன்மேலும்

போகவலையும் அன்பையும் அபிவ்ருத்தி செய்யும் ஸித்த குளிகையோ? இல்லையேல் லாவண்யங்களுக் கெல்லாம் நர்த்தந ஸ்தாநமோ?" என்று திகைக்கும் வண்ணம் விளங்கும் இந்நாரீரத்நம் யாரா யிருக்கலாம்? பால்யம் நீங்கி யௌவநம் எட்டிப் பார்க்கும் தருணத்தி லல்லவோ தென்படுகிருள்? ஒரு ஸமயம் இச்சுந்தரி நாக கந்நிகையா யிருக்கலாமோ? ஒருக்காலு மில்லை. காலே யில்லாத அவர்களுக்கு இத்தகைய நடையழகு எங்கு வந்தது? அல்லது கிம்புருஷப் பெண்மணியா யிருக்கலாமோ? இல்லவே யில்லை. அவர்களுடைய குதிரை முக மெங்கே! முழு மதியைப் பழிக்கும் இவ்வநிதா ரத்நத்தின் முகத்தின் அழகெங்கே? ஒருக்கால் மானிடப் பெண்ணு யிருக்கலாமோ? அது எது? இவளுடைய அவயவங்களின் அமைப்பும் அழகும் அவர்களுக்கு எங்கு வந்தது? அப்பேச்சிற்கே இட மில்லை. ஆகில் மண்ணி லுதித்த இம்மின்னல் கொடி யார்? இக்கட்டழகி எனதுள்ளத்தை விலை கொடுத்தல்லவோ வாங்கிவிட்டாள்.

['இப்போது நாம் வெளி ப்ராகாரத்திலேயே சற்று நேரம் நிற்போம். அவர்கள் கூச்சமின்றித் தாராளமாகப் பேசும் பேச்சுக்களைக் கேட்போம்' என்று கூறி மறைந்து நிற்கின்றனர்.]

[வாஸந்திகா இரு ஸகிகள் புடைசூழ மேடையின்மேல் தோன்றுகிருள்.]

ப்ரமரிகா:—தோழீ! வாஸந்திகா! பூஜைக்குரிய பழம் புஷ்பம் முதலிய ஸாமக்ரிக ளெல்லாம் ஸித்தமா யிருக்கின்றன. உன் மனதுக் கிசைந்த மணவாளனை அடையும் பொருட்டுத் தேவியை ஆராதிக்கக் கடவாய்.

[வாஸந்திகா புஷ்பங்களைக் கையில் வாங்கிக்கொண்டு தேவியை அர்ச்சித்துப் பிறகு இருகைகளையும் கூப்பி த்யானித்துக் கொண்டு விளங்குகிருள்.]

பகவான்:—ஆஹா! எத்தகைய அழகிய காட்சி! சித்ரத்தில் எழுதி யல்லவோ கண்டு களிக்க வேண்டும்! மெதுவாக மந்த்ரங்களை உச்சரிப்பதினல் அதரங்கள் சற்று அசைகின்றன. மார்பின் பாரம் தாங்காமல் தேஹம் சற்று வணங்கி நிற்கின்றது. தேவியை த்யாநம் செய்வதால் அரைக்கண் மூடி உள்ளது. இந்த ஸௌந்தர்ய மூர்த்தியை எத்தகைய கைதேர்ந்த சித்ரக்காரனுலும் எழுத முடியாது. அன்றியும் தோழா! இதோ பார். அவள் கையில் வைத்திருக்கும் புஷ்பாஞ்ஜலியின் அழகைப் பார்த்தால், மன்மதனுடைய புஷ்பங்கள் நிறைந்த அம்பருத்தூணி போலல்லவோ விளங்குகிறது?

விதூ:— தேவா! இதுவும் ஒரு விசித்ரம் தான். விளையாட்டாக வேட்டையாடும் பொருட்டு எழுந்தருளின சிங்கப்பிரானை தேவரீர்மேல் அவ்வல்பன் மன்மதனும் வலை வீசி வேட்டை ஆடவல்லவோ பார்க்கிருன்? அவன் ஸாஹஸமும் ஸாமர்த்யமும் அபாரம்.

பகவான்:—நண்பா! நன்று கூறினுய். மன்மதன் என்மேல் வேட்டை யாட எண்ணுகிருன் என்று கூறவும் வேண்டுமோ? அவன் ஸாமர்

த்யச் செய்கையைச் சற்று விவரித்துக் கூறுகிறேன் கேள் :—அவன் எனது மனமாகிய மானை, கொடியைப் பழிக்கும் அப்பெண்மணியின் புருவமாகிய வலையால் கட்டினன். அதிலிருந்து அப்பேதை ப்ராணி எவ் விதமோ தப்பித்துக் குதித்து மார்பாகிய மலைமேல் ஏறி உட்கார்ந்தது. அவ் வீரனுடைய திறமையைப் பார். அங்கும் அதை நிம்மதியாக இருக்க விடவில்லை. அங்கிருந்து துரத்தி நாபியாகிய பிலத்துக்குள் பிடித்துத் தள்ளிவிட்டான். ஆஹா! என்ன விந்தை! இப்போது என்னுடைய சித்தம் வெளிவர இயலாமல் அதற்குள்ளேயே சுற்றி சுற்றிச் சுழல்கிறது. என்ன செய்வது! அனைத்தும் விதியின் செயல்.

விதூ:—ஆம்; அதற்கென்ன ஸந்தேஹம்? அழகு தேவதை அன்னை லக்ஷ்மீ தேவி இருக்க, இவ்வேடப் பெண்மேல் உங்கட்கு மையல் உதிப்பதேன்? எல்லாம் தெய்வச் செயல் தான்; இப்போது தாங்கள் அவள் முன்னிலையில் சென்று பூஜா புஷ்பத்தின் பயனை அடைவதே உத்தமம்.

பகவான்:— நேசா! அது எவ்விதம் ஸாத்யம்? ஒருக்காலும் பதற்றம் கூடாது. யோசனையின்றி எக்கார்யமும் செய்தல் கூடவே கூடாது. முத லில், இவள் யாருடைய பெண்ணோ? எந்தப் பாக்யவான் பாணிக்ரஹணம் செய் தானோ! அல்லது விவாஹ மாகாமல் இருந்தாலும், மற்றெவரிடமாவது அவள் காதல் கொண்டிருக்கலாம். அவளுடைய மனோபாவம் இன்னதென் றறியா மல் நாமே வலுவில் சென்று வார்த்தை யாடுவது ஒருக்காலும் தர்ம மாகாது.

வாஸந்திகா:—[ஆநந்தம் பொங்க] தோழிமார்களே! இதென்ன ஆச்சர் யம்! இன்று தேவியின் பூஜை முடிவதற்குமுன் படபடவென்று என்னுடைய இடதுகண் துடிக்கின்றதே! என்று மில்லாத சாந்தமும் ஸந்தோஷமும் மன தில் நிறைந்து ததும்புகின்றனவே!

சதுரிகா:— ஸகி! கிராத ராஜனின் செல்வப் புதல்வியே! ஸாக்ஷாத் லக்ஷ்மிக்கு ஸத்ருசமாகிய ஸௌந்தர்யவதி யல்லவா நீ? உனக்குத் தக்க கண வன் புருஷோத்தமன் ஒருவனே. ஆகையால் அவனே பதியாக வந்து உன்னை அங்கீகரிப்பான் என்பதை ஸூசிக்கிறது இந்நற் சகுனம்.

பகவான்:—இப்பெண்மணி தன் மனத்திற் குகந்த நாயகனை விரும்பி வேண்டுவதைப் பார்த்தால், அவள் கல்யாண மாகாத கந்நிகை என்பது ஸ்பஷ்ட மாக விளங்குகிறது.

விதூ:—[சற்று ஆக்ஷேபனையுடன்] ப்ரபோ! இப்பெண்மணி என்னமோ அழகுக் கடல்; லாவண்ய ராசி; குணக் குன்றம்; ஆனல் சந்த்ரனுக்குக் களங்க மிருப்பதுபோல் வேடுவக் குலத்தி லல்லவோ பிறந்துவிட்டாள்! இந்த ஒரு தோஷ மில்லாம லிருந்தால் அத்யந்தம் ச்லாக்யமா யிருக்கும். பாவம்! என்ன செய்கின்றது! அது அவள் புரிந்த அத்ருஷ்டம்.

பக:-[மிக்க ப்ரேமையுடன்] நண்பா! நீ இவ்விதம் புகல்வது தகாது. வேடுவக் குலத்தில் உதித்தவளென இக்கந்நிகா ரத்நம் ஒருக்காலும் இகழத் தக்கவள் அல்லள். இதோ பார். உலகத்தில் நத்தையில் பிறந்த நல் முத்து எவ்வளவு சிறந்து விளங்குகிறது! அது பகவான் கிரீடத்திலும், சக்ரவர்த்திகள் மகுடத்திலு மன்றோ ஏறி ஜ்வலிக்கின்றது? சேற்றில் முளைக்கும் செந்தாமரை புஷ்பங்களுள் சிறந்த தல்லவா? ஸ்ரீ தேவிக்கு அது வாஸஸ்தாநம். பகவத் அர்ச்சனைக்குச் சிறந்த மலர். அதிருக்கட்டும். தேனீயின் எச்சில் என்று தேனை யார் பருகாமல் இருக்கின்றனர்? அது ஸர்வ ச்லாக்யம் அன்றோ? ஆகையால் உத்தம வஸ்துக்கள் எங்கு ஜநித்தாலும் விடத்தக்கவை அல்ல. குப்பையில் கிடைத்தாலும் மாணிக்கத்தின் ஒளி குன்றுமோ?

சதுரிகா:-தோழீ! சாஸ்த்ர விதி ப்ரகாரம் தேவியின் ஆராதநம் முடிவடைந்தது. இனி உனது உள்ளத்தைக் கொள்ளைகொண்ட காதலனை அடைவதின் பொருட்டுத் தேவியை வரம் வேண்டவேண்டு மல்லவா? அதன் பொருளை அமைத்து ஓர் அழகிய கீதம் பாடக்கடவாய்.

பகவான்:—என் பாக்யமே பாக்யம்! 'செல்வமும் சிறப்பும் வரத் தொடங்கினல் மேன்மேலும் தொடர்ந்து வரும்' என்னும் உலக வசநம் எக்காலமும் மாருது. ஏனெனில்: இந்நாரீ ரத்நத்தினுடைய ஸௌந்தர்ய ராசியைக் கண்ட என் கண்கள் களிப்புற்றன. இப்பொழுது இவள் பாடப்போகிற கீதத்தைக் கேட்டு என் செவிகள் விடாய் தீர்ந்து அமுதத்தைப் பருகப்போகின்றன. கண்ணுக் கினியது கண்டேன். செவிக் கினியதைக் கேட்கப்போகிறேன்.

[வாஸந்திகா ப்ரமரிகாவின் கையிலிருக்கும் வீணையை வாங்கிக்கொண்டு பாடுகிருள்.]

"ஓ பகவதீ! தாயே! தேவி! உன் அடி பணிந்தேன். உன்னை அடைக்கலம் புகுந்தவர்களுடைய மநோபீஷ்டத்தைக் கற்பக வ்ருக்ஷம்போல் வாரிவாரி வழங்கும் வள்ளல் அல்லளோ நீ! என்னுடைய ப்ரார்த்தனையைச் சற்றுச் செவி சாய்க்கவேணும். புருஷோத்தமன்—தாமரைக் கண்ணன்—அந்த நரஸிம்ஹ தேவனை — எனக்குப் பதியாக அருளக்கடவாய்."

பகவான்:—[உல்லாஸமும் மந்தஹாஸமும் திருமுகமண்டலத்தில் நர்த்தநமாட] தோழா! இவள் ஸங்கீதம் மாசுமறு வற்றது. அத்யந்தம் ச்லாக்யம். என்ன அழகு! என்ன லாகவம்! வீணை வாசிக்கும் விளையாட்டில் அவள் விரல்வரிசை இருந்த நேர்த்திதான் என்ன! உச்ச ஸ்வரத்தில் ராக ஸஞ்சாரம் செய்யும்போது அவள் மதிமுகம் எவ்வளவு அழகாய் விளங்கிற்று! சற்றுகிலும் விகாரம் அடைந்ததா? அவள் குரலோ குயிலின் குரலையும் பழிக்கின்றது. தாளம் தவருமல் ஸ்வரம் எவ்வளவு பொருத்தமாக ச்ருதியுடன் சேர்கின்றது! இதனல் ஸங்கீதக் கலையே அவளுக்கு அதீநம் என்று எண்ணுகிறேன்.

அக்கலை அவளிடம் கைகட்டிவாய் புதைத்து அவளிட்ட ஏவலுக்குக் காத்திருக்கின்றது.

விதூ:—ப்ரபோ! இனி என்ன யோசனை? தேவரீர் ஸந்தேஹம் தீர்ந்ததல்லவா? இப்போது விரைவில் சென்று அப்பெண்மணியைப் பாணிக்ரஹணம் செய்துகொள்ளக்கடவீர். ஏனெனில்: 'தாமரைக் கண்ணனாகிய நரஸிம்ஹன்' என்று தேவரீர் திருநாமத்தை யல்லவோ குறிப்பிட்டு வேண்டுகிருள்.

பகவான்:—[சற்று நகைத்து] அப்பா! போதும் போதும் உன் பேதைமைப் பேச்சு! நீதி ஸாரஜ்ஞர்கள் "கவநமோ காதலியோ தாமாக வநுவில் வருவது ச்லாக்யம். பலாத்காரமாய் அடைவது என்றைக்கும் ரஸாபாஸமாக முடியும்; எதையும் ஆலோசனையின்றிப் பதற்றமாய்ச் செய்வது நல்லதல்ல" என்றல்லவோ கூறுகிருர்கள்?

விதூ:—சரி. ஆனல் இவ்விதம் செய்யலாமென்று எனக்குத் தோன்றுகிறது. அதை விண்ணப்பம் செய்யலாகுமா?

பகவான்:—ஆஹா; என்ன யோசனை? திவ்யமாய்க் கூறலாம்; சரியாயிருந்தால் அவ்விதமே செய்யலாம்.

விதூ:—அப்பெண் இப்போது தங்களை விரும்பித்தேவியை வேண்டினள் அல்லவா? தேவியின் வரம்போல் அவளைப் பாணிக்ரஹணம் செய்துகொள்ளும் ஸூசனையுடன் கூடிய பாடல் ஒன்றை எழுதி அவள் முன்னிலையில் விழுமாறு செய்வது உத்தமம் என எண்ணுகிறேன்.

பகவான்:—[மந்தஹாஸத்துடன்] ஒஹோ! பாதக மில்லையே! நல்ல மேதை! உன் யோசனை மிகவும் ச்லாக்யம். அவ்விதமே செய்கிறேன்.

[தாழம்பூ மடல் ஒன்றை எடுத்துத் தனது நகத்தினல் எழுதி அவள் முன்னிலையில் விழுமாறு எறிகிருர்.]

சதுரிகா:—[ஆச்சர்ய மடைந்து வெகு லாகவத்துடன் அம்மடலை எடுத்துக் கொள்ளுகிருள். பிறகு வாஸந்திகையினிடம் கொடுத்து] ஸகீ! உனது காநத்தின் முடிவில் தேவி அருளின பத்ரிகைபோல் தோன்றுகிறது. இது என்னவென்று படித்துப் பார்.

ப்ரமரிகா:—[அதை உற்றுப் பார்த்து] ஆம்; இது தேவி அருளிய பத்ரிகையே. உனது பக்தியும் ச்ரத்தையும் மிக்க ஆராதநத்தை அவள் அங்கீகரித்து உனக்கு அன்புடன் வரமருளிய பத்ரிகைதான் இது. [பத்ரிகையைச் சதுரிகாவின் கரத்திலிருந்து வாங்கி வாஸந்திகாவின் கையில் கொடுக்கிருள்.]

வாஸந்திகா:—[அதை ஆதரத்துடன் பெற்று மனதுக்குள் படிக்கிருள்.] பிறகு [தனக்குள்] தேவியானவள் எனது புண்யமாகிய கொடியில் பழம் பறிக்

கப்போவதையே கூறுகிறுள். [வெளிப்படையாக] ஸகீ! சதுரிகா! என்னமோ இக்கடிதத்தில் எழுதியிருக்கும் வசநம் எனக்குத் தெளிவாக ஒன்றும் விளங்கவில்லே. நீயே சற்றுப் படி கேட்போம். [அவள் கையில் பத்ரிகையை கொடுக்கிருள்.]

பக:— நண்பா! இவள் வார்த்தையைக் கேட்டு என் மனம் கலங்குகிறது. பெண்மணிக்குப் புரியவில்லே என்பதன் அபிப்ராயம்தான் என்ன?

விதூ:-- ஸ்வாமீ! இதென்ன ஆக்ரம்! ஸமாசாரம் முற்றும் அறிவதன் முன் ஏன் இத்தனே மனக்கலக்கம்? பிறகு என்ன நடக்கிறதென்று பார்ப்போம்.

சதுரிகா:— ஸகீ! இது நம்பத்தக்க விஷயம் அல்ல. உனக்கா அர்த்தம் புரியவில்லே? நீ ஸகலகலாவல்லி யல்லவா? உனக்கு அன்பன் கிடைக்கும் ஆநந்தத்தைத் தெரிவிக்க வெட்கம். அதற்காகத் தெரியாத்தனத்தை என் உன்மேல் ஏற்றிட்டுக்கொள்ளுகிருய்?

ப்ரமரிகா:– [பரிஹாஸமாய்] ஸகீ! கடிதத்தின் உண்மை ஸமாசாரத்தை நீ கூறத் தேவையில்லே. உன் மேனி முழுவதும் விளங்கும் மயிர்க்கூச்சலே அதைப் பளிங்குபோல் தெரிவிக்கிறதே!

சதுரிகா:— இருக்கட்டும். அவள் கூருமல்போனுல் என்ன? நாமேதான் படிப்போம் [என்று பத்ரிகையை வாங்கிக்கொண்டு படிக்கிருள்.]

"ஒ! ஸுமுகீ! உன்னுடைய ஶுச்ரூஷையினுல் நான் மிகவும் களிப்புற்றேன்."

ப்ரமரிகா:– ஆஹா! என்ன ஆச்சர்யம்! நமது அன்னே குல தேவதைக்கு உன்மேல் எத்தகைய வாத்ஸல்யம்!

சதுரிகா:– நீ வேண்டிய ப்ரகாரம் பாக்யவதியாகிய உனக்கு தாமரைக் கண்ணுகிய புருஷோத்தமனே பதியாவான்.

வாஸந்திகா:– [மனத்துக்குள்] இவ்வுலகில் அத்தகைய புருஷோத்தமன் கிடைப்பது மிகவும் துர்லபம்.

சதுரிகா:— உன்னே அப்பரம புருஷனுகிய அஹோபிலேசனே பாணிக்ரஹணம் செய்வான். இது திண்ணம்.

[சதுரிகா பத்ரிகையைப் படித்து முடித்தாள். அவள் ஆச்சர்யத்துக்கும் ஆநந்தத்துக்கும் கங்கு கரையே இல்லே.]

அடாடா! இதென்ன! ஸாதாரண பத்ரிகையா! ரதியின் பதியாகிய மந்மத ராஜனுடைய கட்டளேப் பத்ரிகை. பரிபூர்ண பாக்யத்தைக் காட்டும் விஜய பத்ரிகை. நரஸிம்ஹ பாணிக்ரஹண வ்ருந்தாந்தத்தைத் தெரிவிக்கும் கர்ணும்ருதப் பத்ரிகை. இத்தகைய மஹிமை வாய்ந்தது தேவியின் அநுக்ரஹ பத்ரிகை.

ப்ரமரிகா:— தோழீ! நீயே பாக்யசாலி. இப்போது நீ ஸௌந்தர்ய லாவண்யங்களினால் மட்டும் ஸ்ரீ தேவிக்கு ஸபத்நி யன்று. அஹோபிலேச்வரனைக் கணவனாக அடைவதினாலும் ஸபத்நி ஆகப்போகிறாய்.

விதூ:— ஸ்வாமி! இது நல்ல தருண மல்லவா! இப்பொழுதாகிலும் நீங்கள் அவள் முன்னிலையில் சென்று, தங்களைத் தெரிவித்துக்கொள்வது நலம்.

[திரைக்குள்]

"ஓஹோ! நான் எத்தகைய வீராதிவீரன்! என்னுடைய பல பராக்ரமங்களைக் கேளுங்கள். கூர்மையுள்ள ஆயுதங்களினால் ஆயிரக்கணக்கான ஸிம்ஹங்களை ஸம்ஹரித்தேன். அதி சீக்ரமாக அவற்றின் குட்டிகளை இவ்விடம் கொண்டுவந்துள்ளேன். இவ்வளவேயோ எனக்கு ஸாமர்த்யம்! உயிருடன் முதலைகளைப் பிடித்து வந்தேன். மேலும் பழகிய யானைகளைக்கொண்டு காட்டு யானைகளை வெகு தந்த்ரமாய்க் கொண்டுவந்தேன். அடடா! எவ்வளவு துஷ்டக் காட்டுப் பன்றிகள்! அவைகளின் முன்கால்களைக் கட்டிக் காவடியில் வைத்துக் கொண்டுவந்து சேர்ந்தேன். எத்தகைய க்ரூர ம்ருகங்கள்! பெரும் புலிகள்! அவைகள் தங்கள் வால்களினாலேயே ஆயிரக்கணக்கான மனிதர்களை அடிக்கும் பலமுள்ளவை. அவைகளையே அடக்கி வண்டிகளில் ஏற்றி இவ்விடம் சேர்ப்பித்துள்ளேன். இவ்வளவு ஸாமர்த்யமும் பராக்ரமமும் எவருக்கு உண்டு?"

[வாஸந்திகா, ப்ரமரிகா, சதுரிகா, மூவரும் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துத் திகைத்தனர்.]

சது:— தோழி! இம்மஹா வநத்தில் யாரோ ஒரு சக்ரவர்த்தி விநோதார்த்தம் வேட்டையாட வந்திருப்பதுபோல் தோன்றுகிறது. ஆகையால் நாம் இனித் தனிமையில் இவ்விடம் இருப்பது தகாது. நமது இல்லத்திற்குச் செல்வோம் வா. சீக்ரம் புறப்படு.

[வாஸந்திகை, மனத்திற்குள் தேவியின் அநுக்ரஹ வார்த்தையை எண்ணி எண்ணி மனமகிழ்ந்தாள். அதையே ஆலோசித்தவண்ணம் ஸகிகளுடன் மறைந்து விடுகிறாள்.]

பக:— என்னே எனது துர்ப்பாக்யம்! கைக்கெட்டிய கனி வாய்க்கு எட்டாமல் மறைந்ததே! பக்கத்தில் நின்றிருந்தும் அப்பெண்மணியுடன் நேரில் ஒரு வார்த்தையாவது பேசி இன்புற்றேனா! அல்லது ஒருவரை ஒருவர் கண்களினாலாவது பார்த்துக் களித்தோமா! அதுவு மில்லையே! என்ன ஆச்சர்யம்! இதுவும் விதியின் செயலே யன்றோ?

விதூ:— ஆம் ஸ்வாமி. அதற்கென்ன செய்வது? தேவரீருடைய பரிஜநங்களினாலேயே இப்பொழுது இவ்வித துக்கம் நேர்ந்தது. அவர்கள் இப்பொழுதுதான் வேட்டையை முடித்துவிட்டுப் பின் திரும்பிவந்தனர் போலும். அவர்கள் பெருமையும் புகழ்ச்சியும் கோலாஹலமும் வானளாவிப் பரவின. பாவம்! அதைச் செவியுற்ற அக்கிளி பயந்து பறந்துபோய்விட்டது.

[திரைக்குள்] "ஏ படர்களே! மறுபடியும் தடாகங்கள் ஸரங்கள் இவைகளுக்குச் சிலர் சென்று இன்னும் ம்ருகங்களைத் தேடுங்கள். மற்றும் சிலர் குஹைகளுக்குள் சென்று பதுங்கி யிருக்கும் ம்ருகங்களைத் தேடிப் பிடியுங்கள். பின்னும் சிலர் அடர்ந்த புதர்களுள் சென்று நன்ருகப் பாருங்கள். மற்றும் மிஞ்சிய வீரர்கள், தாஹம் தாங்காமல் வாயில் நுரை தள்ள உச்சி வெயிலின் தாபத்தினுல் அடிபட்டு ஆங்காங்கு ஒளிந்து மெதுவாக வெளிவரும் க்ரூர ம்ருகங்களின் வழிகளில் நின்று அவைகளைப் பிடித்து வாருங்கள்."

பக:- [ஆகாயத்தை உற்று நோக்கி] ஆம்; ஆதித்யன் அம்பர தலத்தின் மத்யத்தை யடைந்துவிட்டான். ஆயிரம் கிரணங்களுடன் ஜ்வலிக்கிருன். ப்ராதஸ் ஸந்தியில் அந்தணர்களால் விடப்பட்ட அர்க்யத்தைத் தன்னுடைய கிரணங்களால் ஸ்வீகரித்தான். இப்பொழுது மாத்யாந்ஹிக ஸமயத்தில் விடும் அர்க்யத்தை ஆதரத்துடன் ஏற்கும்பொருட்டு நெற்றிக்கு நேர் தோன்றி யுள்ளான் ஸூர்ய தேவன்.

பக:-[மறுபடியும் தடாகத்தைக் கடாக்ஷித்து] தோழா! இதோ பார்த்தாயா! இன்று காலை மலர்ந்த தாமரைப் புஷ்பங்கள் வரிசை வரிசையாக வீதிகளைப் போல் தோன்றும் காட்சியை! அவைகளைக் கண்ட சக்ரவாகப் பக்ஷிகள் தங்களுக்கு அவைகளை அழகிய உயர்ந்த உப்பரிகைகளாக அமைத்துக் கொண்டன. அதனுள் அப்பக்ஷிகள் தங்கள் காதலிகளுடன் கொஞ்சிக் குலாவும் விந்தையைக் கண்டா யல்லவா? மேலும் ஸூர்யனைக் கண்ணுல் காணவொண்ணுத மானஸ ஸரோவரத்திலிருந்து வந்திருக்கும் ஹம்ஸப் பக்ஷிகளைப் பார். அவைகள் தங்கள் நாயகிகளை எவ்வளவு அன்பும் ஆதரவும் பொங்க வெயில் தாக்காமல் இறகுகளை விரித்து உபசரிக்கின்றன!

விதூ:—ஆம்; கடும் வெயில்! ஸூர்யன் உச்சியில் தோன்றிவிட்டான்! பசி காதடைக்கிறது. மிகவும் களைத்து விட்டோம். ஆகையால் இப்பொழுது கருடாசலத்திற்கே திரும்பிச் செல்வோம்.

பகவான்:-[அப்பெண்ணை நினைத்துக்கொண்டு] ஆஹா! அச்சுந்தரி தன் தோழிகளின் கைகளைப் பிடித்துக்கொண்டு எவ்வளவு ஒய்யாரமாக நடந்து சென்ருள்! ஆஹா! அவள் தனிமையாகவா சென்றனள்! இது விந்தையிலும் விந்தை! யானை விழுங்கிய விளங்களிபோல் என் மனத்தை அபஹரித்து உடலை மட்டும் இங்கு விட்டல்லவோ சென்ருள்! என் நிலைமையை எவ்விதம் வர்ணிப்பேன்.

விதூ:-ப்ரபோ! அது இருக்கட்டும்; இப்பொழுது அதைப்பற்றிச் சிந்திப்பதேன்? தங்கள் உள்ளத்தைக் கொள்ளை கொண்ட அக்கந்நிகையை எப்பாடு பட்டாகிலும் உமது வசம் சேர்ப்பது என் கடமை. அப்பொழுது விளங்கும் இவ்வேழையின் ஸாமர்த்யம். இப்பொழுது முதலில் கருடாசலம் செல்வோம். ஸேவார்த்திகள் காத்திருப்பர். [இருவரும் மறைந்தனர்.]

முதல் அங்கம் முற்றிற்று.

Regd. M. 4437.

ஸ்ரீ:

ஸ்ரீ அஹோபில மடத்தில் அச்சிடப் பெற்ற
கீழ்க் கண்ட புஸ்தகங்கள் ‘ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா’ ஆபீஸில்

விற்பனைக்குத் தயாராயிருக்கின்றன.

		சந்தாதாரர்களுக்கு ரூ. அ.	மற்றவர்கட்கு. ரூ. அ.
1.	ஸ்ரீ [illegible] ஸாராவளி (தேவ[illegible]கர லிபி) [[illegible]ந்தாமணி, கல்பதரு வ்யாக்யாநத்துடன் காலிகோ பயிண்ட் செய்தது]	6—8	7—8
2.	உக்தி நிஷ்டாபரணம் ந்யாஸ நிஷ்டா மீமாம்ஸா ச (க்ரந்த லிபி)	0-12	1—0
3.	உக்தி நிஷ்டாபரணோத்யோதம் ,,	0—8	0-12
4.	வீக்ஷாரண்ய க்ஷேத்ர மஹாத்ம்யம் மணிப்ரவாள வ்யாக்யாநம் (க்ரந்த லிபி)	... 1—0	1—8
5.	ந்யாஸ நிர்ணயம் (க்ரந்த லிபி)	... 0—8	0-12
6.	ஸ்ரீ வீரராகவ ஸ்வாமி ஸுப்ரபாதம் (க்ரந்த லிபி)	0—3	0—4
7.	ஸ்ரீராமாநுஜ ஸித்தாந்த ஸங்க்ரஹம் (க்ரந்த லிபி)	2—0	3—0
8.	ஈஶாவாஸ்ய, கேந, கடோபநிஷத் (நாகர லிபி, தமிழ் மொழி பெயர்ப்புடன், 160 பக்கம்)	1—0	1—8

(தபால் செலவு வேறு)

வேண்டுபவர்கள்:—

மானேஜர், ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா ஆபீஸ்,

நெ. 22, மஹாலக்ஷ்மி தெரு, தியாகராய நகர், சென்னை.

என்னும் விலாஸத்திற்கு எழுதிப் பெற்றுக் கொள்ளலாம்.

Printed by T. A. P. Srinivasavaradachariar, at Sri Sudarsana Press, 14, Sannidhi Street, L. Conjeeveram. Q. H. Ct. 36, (Supply) Edited and Published by S. Vasudevachariar, 22, Mahalakshmi Street, Tyagarayanagar, Madras.

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியாவின் '48 ஜனவரி மாஸத்துச் சந்தா வரவு

			ரூ.
18	ஸ்ரீ	M. K. ஸ்ரீநிவாஸையங்கார், தாதர், பம்பாய் ...	3
44	,,	S. ரங்கஸ்வாமி ஐயங்கார், திண்டிவனம் ...	3
71	,,	S. ஸௌந்தர ராஜய்யங்கார், புத்தூர், திருச்சி ...	3
169	,,	C. M. வெங்கடாசாரி, ஹைதராபாத் (டெக்கான்) ...	3
175	,,	B. K. குப்புஸ்வாமி ஐயங்கார், குத்தி	3
189	,,	P. N. ஸ்ரீநிவாஸாசார்யர், மயிலாப்பூர், சென்னை ...	3
198	,,	P. S. ராகவையங்கார், திருநெல்வேலி	3
205	,,	K. வெங்கடாசார்யர், தளவாய்ப்பேட்	3
207	,,	C. R. ஸ்ரீநிவாஸாசார்யர், வந்தவாசி	3
241	,,	T. பார்த்தஸாரதி ஐயங்கார், க்ருஷ்ணப்ப நாயகன் அக்ரஹாரம், சென்னை ...	3
247	,,	N. S. நாராயணையங்கார், டாட்ஹண்டர் நகர், சைதாப்பேட்டை ...	3
284	,,	K. S. தேசிகாசார்யர், திருவெவ்வுளூர்	3
419	,,	K. பார்த்தஸாரதி ஐயங்கார், பண்ருட்டி ...	3
422	,,	R. சக்ரபாணி ஐயங்கார், எண திருமங்கலம் ...	3
429	,,	A. ஸ்ரீநிவாஸராகவாசார்யர், திருக்கோவலூர் ...	3
442	,,	K. நரஸிம்ஹையங்கார், குவளைவல்லி	3
463	,,	A. நரஸிம்ஹாசார்யர், மாதுங்கா, பம்பாய் ...	7
510	,,	K. ஸ்ரீநிவாஸையங்கார், திருக்குறுங்குடி ...	3
632	,,	K. ராஜகோபாலையங்கார், நெல்லிக்குப்பம் ...	3
649	,,	A. V. வானமாமலாசார்யர், திருவநந்தபுரம் கோட்டை ...	3
686	,,	V. S. ஸ்ரீநிவாஸராகவாசார்யர், தி. நகர்	3
687	,,	R. ஸ்ரீநிவாஸையங்கார், திருமுல்லைவாயில் ...	3
716	,,	K. பத்பநாபையங்கார், திருவநந்தபுரம்	3
754	,,	T. V. ராமய்யங்கார், ஸங்யாஸி க்ராமம், திருநெல்வேலி ...	3
755	,,	G. K. ராமஸ்வாமி ஐயங்கார், டெல்ஹி	3
763	,,	T. K. சேஷாத்ரி, (தண்ணீர்ப்பள்ளி) பீஹார் ...	3
775	,,	P. R. கோபாலஸ்வாமி ஐயங்கார், புலியூர், கரூர் ...	3
777	,,	L ரங்கராமாநுஜாசார்யர், திண்டிவனம்... ...	3
784	,,	S. திருமலை ஐயங்கார், ஹிந்து காலனி, பம்பாய் ...	3
792	,,	T. S. ஸௌந்தரம் ஐயங்கார், குத்தாலம்	3
			94